28.09.2013

## உளுந்து, துவரம் பருப்பு விலை குறையுமா?

உளுந்து மற்றும் துவரம் பருப்பு உள்ளிட்ட பருப்பு வகைளின் விலை நவம்பரில் இருந்து குறையும் வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

தமிழகத்தில் போதுமான அளவில் பருப்பு உற்பத்தி இல்லாததால் பெரும்பாலும் வெளி மாநிலங்களில் இருந்தே உளுந்து, துவரை, பாசிப் பருப்பு, கடலை பருப்பு போன்றவைகள் பெறப்பட்டு வருகின்றன. வட மாநிலங்களில் கிடைக்காதபோது பர்மா போன்ற வெளிநாடுகளில் இருந்து இவை இறக்குமதி செய்யப்படுகின்றன.

இதனால் வடமாநிலங்களில் இருந்து அல்லது வெளிநாடுகளில் பருப்பு விளைவதைப் பொருத்து இங்கே விலையிலும் ஏற்ற இறக்கம் காணப்படும். கடந்த ஆண்டு வடமாநிலங்களில் போதுமான அலவில் பருவமழை இல்லாததால், பருப்பு வரத்து குறைவாக இருந்தது. மேலும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதால் பருப்புகளின் விலை உயர்ந்து காணப்பட்டது.

இந்த ஆண்டு பருவமழை போதுமான அளவு பெய்து, வடமாநிலங்களில் உளுந்து, தவரை போன்றவற்றின் விளைச்சல் அதிகரித்து உள்ளதால் பருப்பு விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து மதுரை மாநகர் பருப்பு உற்பத்தியாளர் சங்கச் செயலர் ஆர். வெற்றிச் செல்வனிடம் கேட்ட போது அவர் கூறியது: உளுந்து, துவரை, பாசிப் பருப்பு ஆகியவற்றின் விலை கடந்த ஆண்டு தீபாவளியின் போது கிலோ ரூ. 90 முதல் ரூ. 100 வரை இருந்தது. கடலை பருப்பு விலை ரூ. 70 வரை உயர்ந்து இருந்தது. இந்த ஆண்டு தற்போது வரையில் உளுந்து, துவரை, பாசிப் பருப்புகளின் விலை கிலோ ரூ. 70 முதல் ரூ. 75 வரையில் உள்ளது. கடலை பருப்பு விலை ரூ. 40 முதல் ரூ. 55 வரை உள்ளது. தீபாவளி வரை இதில் மாற்றம் இருக்காது. ஆனால் நவம்பர் முதல் வடமாநிலங்களில் இருந்து உளுந்து, துவரம் பருப்புகளும் கும்பகோணம், தஞ்சை போன்ற இடங்களில் இருந்து பாசிப் பருப்பும் வரத்துவங்கிவிடும் என்பதால் இறக்குமதி செய்யவேண்டிய நிலை இருக்காது.

இதனால் மேற்கண்ட பருப்புகளின் விலை கிலோவுக்கு ரூ. 15 வரை குறையக்கூடும். கடலை பருப்பு விலை ரூ. 10 வரை குறையும் என்றார்.

## நெல் சாகுபடிக்கு வாய்க்கால்களில் 120 நாள் தண்ணீர் திறக்க கோரிக்கை

உத்தமபாளையம், சின்னமனூர் பகுதிகளில் நெல் சாகுபடிக்கு பி.டி.ஆர். மற்றும் தந்தைப் பெரியார் வாய்க்கால்கள் மூலம் தொடர்ந்து 120 நாள் தண்ணீர் திறக்க வேண்டும் என்று, வெள்ளிக்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு விவசாயிகள் மனு அளித்தனர்.

பி.டி.ஆர். மற்றும் தந்தை பெரியார் வாய்க்கால் பாசன விவசாயிகள் சார்பில், மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமியிடம் அளிக்கப்பட்ட மனு விவரம்:

பி.டி.ஆர். மற்றும் தந்தை பெரியார் வாய்க்கால்கள் மூலம் உத்தமபாளையம், சின்னமனூர் பகுதி நெல் சாகுபடிக்கு வழக்கமாக செப்டம்பர் 15ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படும். தற்போது, முல்லைப் பெரியாறு அணை மற்றும் வைகை அணையில் போதிய தண்ணீர் இருப்பு உள்ள நிலையில், இதுவரை வாய்க்கால்கள் மூலம் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை.

பி.டி.ஆர். மற்றும் தந்தை பெரியார் வாய்க்கால்கள் மூலம் குறித்த பருவத்திலும், போதிய அளவிலும் தண்ணீர் திறக்கப்படாததால், ஒவ்வொரு ஆண்டும் முதல் போக சாகுடிக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு, பயிர்கள் கருகும் நிலை ஏற்படுகிறது.

விவசாயம் கைவிடப்பட்டு வருவதால், விளை நிலங்கள் வீட்டடி மனைகளாக மாறி வருகிறது. விவசாயத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழக்கின்றனர்.

எனவே, நெல் சாகுபடி விவசாயிகளின் நலன்கருதி, பி.டி.ஆர். மற்றும் தந்தை பெரியார் வாய்க்கால்களில் பாசனத்துக்கு உடனடியாக தண்ணீர் திறக்கவும், தண்ணீர் பற்றாக்குறையால் பயிர்கள் கருகி வீணாவதைத் தடுக்கும் வகையிலும், வாய்க்கால்களில் தொடர்ந்து 120 நாள்கள் வரை தண்ணீர் திறந்து விடவும், மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று, அம்மனுவில் தெரிவித்துள்ளனர்.

பி.டி.ஆர். மற்றும் தந்தை பெரியார் வாய்க்கால்கள் மூலம் வரும் அக்டோபர் 1 ஆம் தேதி முதல் தண்ணீர் திறக்கப்பட உள்ளதாகவும், தொடர்ந்து 120 நாள்கள் வரை வாய்கால்களில் தண்ணீர் திறப்பது குறித்து அரசின் ஆலோசனை பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், விவசாயிகளிடம் ஆட்சியர் கூறினார்.

## விவசாயிகள் அல்லாதோருக்கு உரம் விற்பதைத் தடுக்க வேண்டும்

விவசாயிகள் அல்லாதோருக்கு உரம் விற்பதைத் தடுக்க வேண்டும் என்று, விவசாயிகள் குறைதீர் முகாமில் வலியுறுத்தப்பட்டது.

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில், விவசாயிகள் சங்க (கட்சி சார்பற்றது) பொதுச் செயலாளர் கந்தசாமி பேசியது:

விவசாயிகள் அல்லாதோருக்கு உரம் விற்பதைத் தடுக்க வேண்டும். முறைகேடாக உரம் விற்பனை செய்யும் தனியார் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கோவையில் இருந்து ஒரு லட்சம் லிட்டர் பால் கேரளத்துக்கு அனுப்பப்படுகிறது. இதனால், இங்கு பால் தட்டுப்பாடு ஏற்படுகிறது. கேரளத்துக்கு பால் அனுப்புவதை நிறுத்த வேண்டும் என்றார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க கோவை மாவட்டக் குழுத் தலைவர் சு.பழனிசாமி பேசியது:

பல ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டுள்ள ஆனைமலையாறு - நல்லாறு திட்டத்தை செயல்முறைப்படுத்தவும், அதன்மூலமாக பொள்ளாச்சி வட்டார பாசனப் பகுதியை விரிவு செய்யவும் தமிழக அரசு முயற்சி எடுக்க வேண்டும்.

கடும் வறட்சியால் காய்ந்துபோன தென்னை மரம் ஒன்றுக்கு ரூ.5,000 நஷ்டஈடாக வழங்க வேண்டும். மானாவாரி நிலங்களில் மழை நீரைச் சேமிக்கும் விதத்தில் சரிவுக்கு குறுக்கே ஏரி அமைக்கும் திட்டம் வேளாண்மைத் துறையால் செயல்படுத்தப்பட்டது. அத் திட்டம் தற்போது செயல்படுத்தப்படுவதில்லை.

மானாவாரி விவசாய நிலங்களில் மழைநீரைச் சேகரிக்க ஏரித் திட்டம் அமல்படுத்தப்பட வேண்டும். கால்நடைத் தீவன விலைகளைக் கட்டுப்படுத்த மாநில அரசே தீவன உற்பத்தி செய்து வழங்க வேண்டும். மேலும், கால்நடைகளுக்கான தீவன விலையை, பால் விலையை அடிப்படையாகக் கொண்டு மாநில அரசே நிர்ணயம் செய்ய வேண்டும் என்றார்.

இதில், ஆட்சியர் மு.கருணாகரன் பேசியது:கோவை மாவட்டத்தில் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க விவசாயிகளிடம் இருந்து வரும் விண்ணப்பங்களைப் பெற்று பதிவு செய்து, நிலுவை விண்ணப்பங்களுக்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற வேளாண்மைப் பொறியியல் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், ஆலாந்துறை பகுதியைச் சேர்ந்த பாலத்தூர், குமாரபாளையம் பகுதியில் கசிவு நீர்க் குட்டையைச் சீரமைக்கவும், புதிய கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பரம்பிக்குளம்- ஆழியாறு திட்டப் பாசன வாய்க்கால்களில் சட்ட விரோதமான முறையில் தண்ணீர் திருடப்படுகிறது. இதனால், வெள்ளக்கோவில் மற்றும் கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் செல்வது மிகவும் குறைந்துள்ளது. பொதுப் பணித்துறையினர் காவல் துறை மற்றும் வருவாய்த் துறையினருடன் இணைந்து குழுக்களை அமைத்து, கடைமடைப் பகுதிகளுக்கும் தண்ணீர் செல்வதை உறுதி செய்ய வேண்டும் என்றார். மாவட்ட வருவாய் அலுவலர் க.கற்பகம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) விஜயகுமார் உள்பட பல்வேறு அரசுத் துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

## 30-ல் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

உடுமலை வருவாய்க் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 30-ஆம் தேதி நடைபெற உள்ளது.

இது குறித்து வருவாய்க் கோட்டாட்சியர் நா.குணசேகரன் விடுத்துள்ள செய்திக் குறிப்பு:
உடுமலை வருவாய்க் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 30-ஆம் காலை 10 மணியளவில், உடுமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. அனைத்துத் துறை அதிகாரிகளும் கலந்து கொள்ளும் இக்கூட்டத்தில் உடுமலை மற்றும் மடத்துக்குளம் வட்டத்தில் உள்ள விவசாயிகள் பங்கேற்று தங்களது குறைகளைத் தெரிவித்து தீர்வு காணலாம்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 78.32 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 78.32 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,669 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,300 கன அடி நீரும், வாய்க்காலில் 2,560 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 14.81 டி.எம்.சி.

## பசுக்களுக்கு இலவசத் தீவனம் வழங்க வேண்டும்

பால் விற்பனை மூலம் கோடிக்கணக்கில் வருவாய் ஈட்டும் பால் வளத் துறை, கன்று ஈன்ற மூன்று மாதங்களுக்கு பசுக்களுக்கு இலவசமாக தீவனம் வழங்க வேண்டும் என்று குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் விவசாயிகள் பேசுகையில், கடுமையான தீவனத் தட்டுப்பாடு, விலையேற்றத்துக்கு ஏற்ப பால் கொள்முதல் விலை உயர்த்தப்படாததால் விவசாயிகளால் கறவை மாடுகளுக்கு போதிய அளவில் தீவனம் அளிக்க முடியாத நிலைமை உள்ளது.

அதேசமயம், பால் விற்பனை மூலம் பால் வளத் துறை கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது.

எனவே, தீவனத் தட்டுப்பாடு, விலையேற்றத்தைக் கருத்தில் கொண்டு பசுக்களுக்கு கன்று ஈன்றதிலிருந்து மூன்று மாதங்களுக்கு இலவசமாக தீவனம் வழங்க பால் வளத் துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

விளைநிலங்களில் இலவச மின்சாரத்தை தீவனப் புல் வெட்டுதல், மஞ்சள் தூசுதட்டுதல் போன்ற பணிகளுக்கு உபயோகப்படுத்தினால் அபராதம் விதிக்கப்படுகிறது. எனவே, இலவச மின்சாரம் பயன்படுத்துவது குறித்து தெளிவான அறிவிப்புகளை வெளியிட வேண்டும்.

வருவாய்த் துறை சார்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் சரிவர இல்லாததால், பெரும்பாலான விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் கிடைக்கவில்லை. எனவே, பாதிக்கப்பட்ட கரும்பு பயிர்கள், தென்னை மரங்கள் குறித்து மீண்டும் கணக்கெடுப்பு நடத்தி நிவாரணம் அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்த போதும், திருச்செங்கோடு வட்டத்தில் போதிய மழை பெய்யாததால் சோளம் உள்ளிட்ட பயிர்கள் கருகும் நிலையில் உள்ளன.

அந்தப் பயிர்களைப் பாதுகாக்க மாவட்ட நிர்வாகம் விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உயர் நீதிமன்ற உத்தரவுப்படி, பள்ளிப்பாளையம் பொன்னி கூட்டுறவு சர்க்கரை ஆலை, மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆகியவற்றில் கரும்பு விவசாயிகளுக்கு 2004 முதல் 2009 வரையியான ஆண்டுகளுக்கு பங்குத்தொகை அளிக்கப்படவில்லை.

அந்தத் தொகையை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் பேசினர்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்கள் குறித்து மீண்டும் கணக்கெடுப்பு நடத்தி 1606 விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

மற்ற கோரிக்கைகள் மீதும் தீர்வுகாண சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தெரிவித்தார்.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் கோ.செங்குட்டுவன், வேளாண்மை இணை இயக்குநர் ராஜேந்திரன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பிலிக்கல்பாளையம் சந்தையில் வெல்லம் விலை சரிவு

பரமத்தி வேலூர் வட்டம், பிலிக்கல்பாளையம் ஏலச் சந்தையில் வெல்லம் விலை சரிவடைந்துள்ளதால், வெல்ல உற்பத்தியாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

பரமத்தி வேலூர் வட்டத்தில் சோழசிராமணி, ஜேடர்பாளையம்,அய்யம்பாளையம், பிலிக்கல்பாளையம், கபிலர்மலை, அண்ணாநகர், பரமத்தி மற்றும் வேலூர் உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் கரும்பு பயிர் செய்யப்பட்டுள்ளது.

இங்கு விளையும் கரும்புகளை வெல்ல ஆலை உற்பத்தியாளர்கள் வாங்கி, சாறு பிழிந்து அச்சு மற்றும் உருண்டை வெல்லங்களாகத் தாயார் செய்கின்றனர். தயார் செய்யப்பட்ட வெல்லங்கள் 30 கிலோ கொண்ட சிப்பங்களாகக் கட்டப்பட்டு, வெல்ல ஏலச் சந்தைக்கு கொண்டு வரப்படுகின்றன.

புதன், சனிக்கிழமைகளில் வெல்ல ஏலச் சந்தையில் நடைபெறும் ஏலத்தில் தரம் பிரிக்கப்பட்டு ஏலம் விடப்படுகிறது.

ஏலம் எடுப்பதற்கு சென்னை, மதுரை, பெங்களூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஏராளமான வியாபாரிகள் வந்து செல்கின்றனர்.

ஏலம் எடுக்கப்பட்ட வெல்லங்கள் திருச்சி, மன்னார்குடி, திருவாரூர், கும்பகோணம், தஞ்சை, மதுரை, சிவகங்கை உள்ளிட்ட பகுதிகளுக்கும், கர்நாடகம், கேரளம் உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது. கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் அச்சு வெல்லம் ரூ.1,100-முதல் ரூ.1,400 வரையிலும், உருண்டை வெல்லம் ரூ.1,050 முதல் ரூ.1,150 வரையிலும் ஏலம் போனது.

புதன்கிழமை நடைபெற்ற ஏலச் சந்தைக்கு 12 ஆயிரம் சிப்பங்கள் கொண்ட அச்சு வெல்லமும், 11 ஆயிரம் சிப்பங்கள் கொண்ட உருண்டை வெல்லங்களும் ஏலத்திற்கு வந்திருந்தன. அச்சு வெல்லம் ரூ.950 முதல் ரூ.1,100 வரையிலும், உருண்டை வெல்லம் ரூ.900 முதல் ரூ.1,050 வரை ஏலம் போனது.

வெல்லம் வரத்து அதிகமானதாலும்,வியாபாரிகள் அதிக அளவில் வராததாலும் வெல்லம் விலை சரிவடைந்துள்ளது. இதன் காரணமாக வெல்ல ஆலை உற்பத்தியாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

## பருவ மழையின் தாக்கம் குறைந்து வெப்ப அளவுகள் உயர்ந்து வருவதால், பண்ணைகளிலுள்ள கோழிகள் அயற்சியால் பாதிக்க வாய்ப்புள்ளது என்று நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பருவ மழையின் தாக்கம் குறைந்து வெப்ப அளவுகள் உயர்ந்து வருவதால், பண்ணைகளிலுள்ள கோழிகள் அயற்சியால் பாதிக்க வாய்ப்புள்ளது என்று நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 4 நாள்களுக்கு (செப்.28 முதல் அக்.1-ஆம் தேதி வரை) வானம் லேசான மேகமூட்டத்துடன் மழையின்றி காணப்படும். காற்றின் திசைவேகம் மணிக்கு 5 கிமீ முதல் 6 கிமீ வேகத்தில் மேற்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 75.2 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 95 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 40 சதம் முதல் அதிகபட்சம் 84 சதம் வரை இருக்கும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு...: தென்மேற்குப் பருவ மழையின் தாக்கம் குறைந்துள்ளதால் குறைவான மேகமூட்டமும், வெப்ப அளவுகள் சற்று உயர்ந்தும் காணப்படும். எனினும், கோழிகளின் தீவன எடுப்பு இயல்பையொட்டியே இருக்கும். சில இடங்களில் கோழிகளிடையே லேசான வெப்ப அயற்சி காணப்படலாம். தரமான தீவன மூலப்பொருள்களை உபயோகிப்பதன் மூலம் முட்டை உற்பத்தியைத் தக்க வைக்கலாம்.

கோழியின நோய் ஆய்வகத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கோழிகள் பெரும்பாலும் குடல்புண், ஈரல் அயற்சி மற்றும் வெப்பத்தின் தாக்கம் ஆகியவற்றால் இறந்திருப்பது தெரிய வந்துள்ளது. எனவே, பண்ணையாளர்கள் தீவன மூலக்கூறுகளில் கிருமிகளை ஆய்வு செய்யவும், அயற்சியைக் களையும் வகையில் தக்க முன்னேற்பாடுகள் செய்திடவும் வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு..: மரவள்ளியில் பெருமளவில் காணப்படும் மாவுப்பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த அசிரோபேகஸ் ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 100 என்ற அளவில் இட வேண்டும்.

ஒட்டுண்ணி உற்பத்தி செய்யும் முறையை நாமக்கல் வேளாண் விரிவாக்க நிலையத்தை நேரிலோ அல்லது 04286 266345 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு பெறலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காட்டுப் பன்றிகளைக் கட்டுப்படுத்த வலியுறுத்தல்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடர்ந்து பயிர்களை சேதப்படுத்தி வரும் காட்டுப் பன்றிகளின் அட்டகாசத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாதாந்திர விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தலைமை வகித்தார். கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள், கிருஷ்ணகிரி உழவர் சந்தையில் நடைபெறும் முறைகேட்டைத் தடுக்க வேண்டும். மாவட்டத்தில் கால்நடைகளுக்கு பரவும் நோயைத் தடுக்க இலவச ஊசி போட வேண்டும். வேப்பனப்பள்ளி மற்றும் எம்.சி.பள்ளி பகுதியில் நிலக்கடலை தற்போது அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. இந்த நிலையில், நிலக்கடலையைக் காட்டுப் பன்றிகள் சேதப்படுத்தி வருகின்றன. இதைத் தடுக்க விவசாயிகளுடன், வனத் துறையினரும் இணைந்து நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

போச்சம்பள்ளியில் உள்ள சூர்யகாந்தி எண்ணெய் தயாரிக்கும் ஆலையைத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.இந்தக் கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப்பிரமணியம், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) சுமதி மற்றும் விவசாய சங்க நிர்வாகிகள் கே.எம்.ராமகவுண்டர், துரை.ராமச்சந்திரன், கிருஷ்ணன், சென்னைய நாயுடு, தருமன், சக்கரவர்த்தி, மாதன், சாக்கப்பன், ரவீந்திரராசு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## நவீன வேளாண் தொழில்நுட்பம்: மாணவிகள் செயல் விளக்கம்

நவீன வேளாண் தொழில்நுட்பம் குறித்து வேளாண் கல்லூரி மாணவிகள் செயல் விளக்கம் அளித்தனர்.

வேலூர் ஆதிபராசக்தி வேளாண் கல்லூரி மாணவிகள் சசிகலா, சூர்யா, மணிமேகலை, புவனேஷ்வரி, தீபா, ரேஷ்மா ஆகியோர் காவேரிப்பட்டணம் கால்வே அள்ளியில் விவசாயிகளுக்கு நவீன வேளாண் தொழில்நுட்பம் (நாட்டிகே பண்ணையம்) குறித்து வெள்ளிக்கிழமை செயல் விளக்கம் அளித்தனர்.

இந்த முறையில், சாணம் மற்றும் பண்ணைக் கழிவுகளை அந்த நிலங்களில் குவித்து வைத்து 60 நாள்கள் மக்க வைத்து உழவு செய்வதன் மூலம் களர் நிலங்களை விளைச்சல் தரும் நிலங்களாக மாற்றலாம் எனவும் அவர்கள் செயல் விளக்கமளித்தனர்.

### விவசாயிகளுக்கு வேளாண் கையேடு வழங்கும் முகாம்

அரியலூர் மாவட்டம் ஜயங்கொண்டத்தில் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடுகள் வழங்கும் முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. முகாமில் வேளாண் துணை இயக்குனர் சுப்பிரமணியன் பங்கேற்று விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடுகள் வழங்கி, மண் ஆய்வு செயவதன் அவசியம், பரிந்துரையின் படி உரமிடுதல், மண்மாதிரி எடுக்கும் முறை, வேளாண் துறை மூலம் வழங்கப்படும் மாநிய திட்டங்கள் மற்றும் இடுபொருட்கள் வழங்குதல் மற்றும் வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து பேசினார். இதில் வேளாண் உதவி அலுவலர்கள் கோவிந்தராசு, கவிதா, மணிகண்டன், பழனிவேல் மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் பங்கேற்றனர். முன்னதாக ஜயங்கொண்டம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் அ.இளங்கோவன் வரவேற்றார். வேளாண் அலுவலர் நா.கலைச்செல்வி நன்றி கூறினார்.

### "பயிர்க் கடனுக்கு வங்கிகள் முன்னுரிமை அளிக்க வேண்டும்'

விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்க வங்கியாளர்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன். தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற வங்கியாளர்கள் ஆலோசனைக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து அவர் மேலும் பேசியது:

தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவை சாகுபடி செய்யப்பட்டு, தற்போது அறுவடை பணி நடைபெற்று வருகிறது. விவசாயிகள் சம்பா சாகுபடியும் மேற்கொண்டு வருகின்றனர். சாகுபடிக்குத் தேவையான நெல் மற்றும் உரம் போதுமான அளவில் இருப்பில் உள்ளன. இந்த நிலையில், வங்கியாளர்கள் விவசாயிகளுக்கான பயிர்க் கடன்களை வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். பல்வேறு அரசு நலத் திட்டங்களின் உதவித் தொகை பயனாளிகளுக்கு வங்கிகள் மூலமாக வழங்கப்படுகின்றன. எனவே, அரசால்

செயல்படுத்தப்படும் அனைத்து நலத் திட்டங்களின் பயன்கள் உடனடியாக பயனாளிகளுக்குச் சென்றடைவதற்கு வங்கியாளர்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றார் அவர். இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முதன்மை மண்டல மேலாளர் எஸ். ராஜேந்திரன், இந்திய ரிசர்வ் வங்கியின் உதவிப் பொது மேலாளர் எஸ். சுந்தரேசன், நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் கே. சுப்பிரமணியன், முன்னோடி வங்கி மேலாளர் என். கஜேந்திரநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### 72 கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு

தஞ்சாவூர் மாவட்டத்தில் கூடுதலாக 72 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன என மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தஞ்சாவூர் மாவட்டத்தில் நிகழ் காரீப் கொள்முதல் பருவத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் 24 கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வந்தன.

தற்போது, குறுவை அறுவடை தொடங்கியுள்ள நிலையில் விவசாயிகளின் நலன் கருதி செப். 23-ம் தேதி முதல் கூடுதலாக 72 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதில், தஞ்சாவூர், பட்டுக்கோட்டை வட்டத்தில் தலா 4, ஒரத்தநாடு வட்டத்தில் 12, திருவையாறு வட்டத்தில் 10, கும்பகோணம் வட்டத்தில் 7, திருவிடைமருதூர் வட்டத்தில் 18, பாபநாசம் வட்டத்தில் 16, பேராவூரணி வட்டத்தில் ஒரு நிலையமும் திறக்கப்பட்டுள்ளன. இங்கு அரசு அறிவித்துள்ளபடி சன்ன ரகம் குவிண்டாலுக்கு ரூ. 1,350-ம், பொது ரகம் குவிண்டாலுக்கு ரூ. 1,300-ம் கொள்முதல் தொகையாக (ஊக்கத் தொகை உள்பட) வழங்கப்படுவதுடன் விவசாயிகளின் நலன் கருதி அரசால் வரையறுக்கப்பட்ட 17 சதவீத ஈரப்பதம் வரை நெல் கொள்முதல் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### களப்பணி மேற்கொள்ளாததால் கருகிய நெற்பயிர்கள்

அதிகாரிகள் களப் பணி மேற்கொள்ளாததால், மேட்டூரில் தண்ணீர் இருப்பு இருக்கும் நிலையிலும், கடைமடை மாவட்டங்களில் நெற்பயிர்கள் கருகும் நிலையை அடைந்துள்ளது என்று நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் குற்றம் சாட்டினர். நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் து.

முனுசாமி தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் மு. ஆசியா மரியம், நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் எம். ராதாகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் ஞா. ஜெயராஜ், வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) ஆர். ரவீந்திரன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செல்வின் துரை, முன்னோடி வங்கி மேலாளர் கதிர்வேல் மற்றும் முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

ஏ. அலெக்ஸாண்டர்: குறுவை நெல் சாகுபடிக்காக மாவட்டத்தில் மேலும் கூடுதலாக 10 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டும். நெல்லுக்கான குறைந்தபட்ச விலையை குவிண்டாலுக்கு ரூ. 1,500-ஆக நிர்ணயிக்க வேண்டும். என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 26 கோடியை உடனடியாக வழங்க வேண்டும். மு. செல்லப்பன்: காவிரி உள்கோட்ட பகுதிகள் விளை நில பாசன ஆயக்கட்டு பகுதிகள் என்பதைக் கருத்தில் கொண்டு, முறை வைக்காமல் ஆற்றுப் பாசனம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சோமு. இளங்கோ: அரிச்சந்திரா நதியில் உவர் நீர் உள்புகுவதைத் தடுக்க, முதலியப்பன் கண்டிக்கு அருகில் தாற்காலிக தடுப்பணை அமைக்க வேண்டும். குரு. கோபி கணேசன்: சிறப்பு தொகுப்புத் திட்டங்களின் கீழ் நீர்ப்பாசன பைப்புகள் வழங்கியதில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலருக்கும் பைப் வழங்கப்பட்டுள்ளது. இதுகுறித்து உரிய விசாரணை மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். சா.வீ. ராமகிருஷ்ணன்: தேசியமய வங்கிகளில் பயிர்க் காப்பீடு இதுவரை ஏற்கப்படவில்லை. கடந்த ஆண்டு கடன் பெற்ற சர்வே எண்ணுக்கு மீண்டும் கடன் வழங்க வங்கிகள் மறுக்கின்றன. இதுகுறித்து உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், வருங்கால விவசாயப் பணிகள் பெரும் பிரச்னைக்குள்ளாகும். எஸ். சம்பந்தம்: மேட்டூர் அணையில் 111 அடி தண்ணீர் இருப்பு உள்ளது. ஆனால், கடைமடை மாவட்டமான நாகை மாவட்டத்தின் பல பகுதிகளில் ஆற்றுப் பாசனம் பொய்த்து, நெற்பயிர்கள் கருகும் நிலையை அடையத் தொடங்கியுள்ளன. தொடர்புடையத் துறைகளின் அதிகாரிகளை மேசைப் பணிகளைத் தவிர்த்து, களப் பணியாற்றச் செய்து, பாசன நீர் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டும்.

ஆட்சியர் து. முனுசாமி பேசுகையில், நாகை மாவட்டத்தில் நிகழாண்டில் 22,682 ஹெக்டேரில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 15,939 ஹெக்டேர்

பரப்பளவில் அறுவடை முடிந்துள்ளது. சம்பா சாகுபடிக்காக 3,900 ஹெக்டேரில் நாற்றங்கால் தயாரிக்கப்பட்டுள்ளது. சம்பா சாகுபடிக்குத் தேவையான அனைத்து வகையான இடுபொருள்களும் இருப்புக் கொள்ளப்பட்டுள்ளது. விவசாயப் பணிகளின் தேவைகளை விரைவாக பூர்த்தி செய்ய மாவட்ட நிர்வாகம் தயாராக உள்ளது என்றார்.

### செப். 30 வரை சம்பா பயிர் காப்பீடு செய்ய விண்ணப்பிக்கலாம்

பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் சம்பா முதல் பருவத்திற்கு செப். 30ம் வரை காப்பீடு செய்யலாம் என தெரிவித்துள்ளார் வேளாண்மை இணை இயக்குநர் ப. சங்கரலிங்கம். இதுகுறித்து அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: பெரம்பலூர் மாவட்டத்தில் சோழமண்டலம் பொது காப்பீட்டு நிறுவனம் வானிலை பயிர் காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் அதிக மற்றும் குறைவான மழை, தொடர்ச்சியான வறட்சி ஆகியவற்றின் மூலம் பயிர் பாதிக்கப்பட்டு, குறைவான மகசூல் பெற்றால் அதை காப்பீடு நிறுவனம் ஈடுசெய்யும். இதில், குத்தகைத்தாரர் உள்பட அனைத்து விவசாயிகளும் பயன் பெறலாம். சம்பா நெல் முதல் பருவத்திற்கு பயிரிட்டுள்ள விவசாயிகள் காப்பீட்டுத் தொகையான ரூ. 17 ஆயிரத்திற்கான பிரிமியத் தொகையான ரூ. 425, செப். 30ம் தேதிக்குள் செலுத்த வேண்டும். இத்திட்டத்தில் பயன் பெற விரும்பும் விவசாயிகள் விதைப்பு செய்த ஒரு மாதத்திற்குள் அல்லது காப்பீடு நிறுவனம் நிர்ணயம் செய்த கடைசி தேதிக்குள், உரிய படிவத்தினைப் பூர்த்தி செய்து இட்ர்ப்ஹம்ஹய்க்ஹப்ஹம் ஙந எங்ய்ங்ழ்ஹப் ஐய்ள்ன்ழ்ஹய்ஸ்ரீங் இர்ம்ல்ஹய்ஹ் கண்ம்ண்ற்ங்க் ல்ஹஹ்ஹக்ஷப்ங் ஹற் இட்ங்ய்ய்ஹண் என்ற பெயருக்கு காசோலையாக அளிக்க வேண்டும். கடன்பெறாத விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையத்திலும், கடன் பெறும் விவசாயிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி கிளை அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கியை அணுகி பயன்பெறலாம். இத்திட்டத்தில் சேர விவசாயிகள் தங்களது பெயரில் உள்ள வங்கி சேமிப்பு கணக்கு புத்தகம், புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையின் நகல் மற்றும் சிட்டா நகலுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

மேலும் விவரத்துக்கு, வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களை பெரம்பலூர் 9047072766, ஆலத்தூர் 9047072764, வேப்பூர் 9047072763, வேப்பந்தட்டை

9047072768, சோழ மண்டல பொதுக் காப்பீட்டு நிறுவன அலுவலரை 8939612974, வேளாண்மை அலுவலர்களை பெரம்பலூர் 8144916148, வேப்பூர் 9843852444, வேப்பந்தட்டை 9443590920, ஆலத்தூர் 8608388197, துணை வேளாண்மை அலுவலர்களை பெரம்பலூர் 7639914464, வேப்பந்தட்டை 8098193683, ஆலத்தூர் 9965652046 உள்ளிட்ட எண்களில் தொடர்புகொள்ளலாம்.

### பருத்தி பயிரிட்டுள்ளவர்களுக்கு அக். 4-ல் தொழில்நுட்ப பயிற்சி

பெரம்பலூர் அருகே, வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் அக். 4-ம் தேதி பருத்தி விவசாயிகளுக்கான தொழில்நுட்பப் பயற்சி நடைபெற உள்ளது என்றார் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் வெங்கடேசன். இதுகுறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: பெரம்பலூர் மாவட்டத்தில் மானாவாரி பயிராக அதிகளவில் பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. தற்போது, பருத்தியில் களை மேலாண்மை செய்து, மேல் உரம் இட மழையை எதிர்நோக்கி விவசாயிகள் காத்திருக்கின்றனர். ஆனால், விவசாயிகள் மழை பொழிந்த உடன் தேவையற்ற உரங்களை இடுவதால், மண்ணின் தன்மை மாறுவதோடு அதிக பூச்சி தாக்குதல் மற்றும் தேவையற்ற செலவினம் ஏற்படுகிறது. இதை தடுக்கும் நோக்கத்தில், வேளாண் அறிவியல் மையத்தில் அக். 4-ம் தேதி பருத்தியில் ஒருங்கிணைந்த உர நிர்வாகம், சாறு உறிஞ்சும் பூச்சிகளின் ஒருங்கிணைந்த நிர்வாகம் மற்றும் மானாவாரி பருத்தியில் நீர் மேலாண்மை குறித்த பயிற்சி நடைபெற உள்ளது. பயிற்சியில், தொழில் நுட்பங்கள் அனைத்தும் காணொலி காட்சி, நேரடி செயல் விளக்கங்கள், வயல் சூழல் ஆய்வின் மூலமாக விளக்கம் அளிக்கப்பட உள்ளது. மேலும், பருத்தியை தாக்கும் பூச்சிகளை அடையாளம் கண்டு கொள்ள விளக்கங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, பெரம்பலூர் மாவட்ட பருத்தி விவசாயிகள் பயிற்சியில் கலந்துகொள்ள 04328- 293592, 9787620754 ஆகிய எண்களில் தொடர்புகொண்டு முன்பதிவு செய்துகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முறைவைக்காமல் தண்ணீர் திறந்துவிட வேண்டும்

திருவாரூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்கு குறைந்தது 15 நாள்களுக்காகவது முறைவைக்காமல் பாசனத்துக்குத் தண்ணீர் திறந்துவிட வேண்டுமென விவசாயிகள்

வலியுறுத்தினர். திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை ஆட்சியர் சி. நடராசன் தலைமையில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க் கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

மாசிலாமணி: பயிர் வளரும் நேரத்தில் தற்போது மாவட்டத்தில் நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதைச் சரிசெய்ய மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தவிர 10 நாள்களுக்கு முறை வைக்காமல் அனைத்து பாசனக் கால்வாய்களிலும் நீர் விட வேண்டும். அனைத்து விவசாயிகளுக்கும் நிபந்தனையின்றி பயிர்க் கடன் வழங்க வேண்டும். தமிழ்ச்செல்வி: டீசல் மானியம் வழங்க வேண்டும். தாலிக்குத் தங்கம் வழங்கும் பணி பிப்ரவரி மாதத்திலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான ரேஷன் கடைகளில் 40 சதம் மட்டுமே மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. ஜெயராமன்: மாவட்டத்தில் கடந்த 3 நாள்களாக தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதைச் சரிசெய்ய வேண்டும். குறைந்தது ஒரு வாரத்துக்கு முறை வைக்காமல் நீர்விட வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் ரசாயன உரங்கள் வாங்க விவசாயகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. பிற விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியத்தை, இயற்கை விவசாயிகளுக்கு தொகையாக வழங்க வேண்டும்.

முருகையன்: விவசாயிகள் குறைதீர்க் கூட்டத்தில் தொடர்ந்து பேசப்படும் குறைகள் நிவர்த்தி செய்யப்படுவதில்லை. இடும்பாவனம் பகுதிக்கு புதிய பாசனக் கால்வாய் அமைத்து ஆயிரக்கணக்கான ஏக்கருக்கு பாசன வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். முத்துப்பேட்டை பகுதியில் கால்வாய்களில் பழுதாகியுள்ள ஷட்டர்களை சீரமைக்க வேண்டும். பாண்டியன்: தற்போது ஏற்பட்டுள்ள தண்ணீர்ப் பற்றாக்குறையை போக்க 15 நாள்களுக்கு முறை வைக்காமல் நீர் விட வேண்டும். அரிச்சந்திரா ஆறு மற்றும் தேவையான கால்வாய்களில் படுக்கை அணை கட்ட வேண்டும். பல கூட்டுறவு வங்கிகளில் முதல்கட்ட கடன்கூட கொடுக்கவில்லை. டிராக்டர் விவசாயிகளைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பழனிவேல் : அனைத்துக் கிராமங்களிலும் பாசன சங்கங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். பள்ளிவர்த்தி, இருள்நீக்கி உள்ளிட்ட பகுதிகளில் கால்வாய்களைத் தூர்வார வேண்டும். வைக்கோல் கட்ட கூடுதல் மானியத்தில் இயந்திரம் வழங்க வேண்டும். ராமகிருஷ்ணன்: குடமுருட்டி ஆற்றில் வினாடிக்கு 2,500 கன அடி தண்ணீர் 10 நாள்களுக்கு முறை வைக்காமல் தொடர்ந்து திறந்துவிட வேண்டும்.

பாலகுமாரன் : கொட்டூர் வாய்க்காலில் முறைவைக்காமல் தண்ணீர் திறந்துவிட்டு 400 ஏக்கர் பாசனப் பரப்பைப் பாதுகாக்க வேண்டும். ராஜதுரை: ஆழ்குழாய் அமைக்க, பம்புசெட் மோட்டார் அமைக்க தேசிய வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் நீண்டகாலக் கடன் வழங்க வேண்டும். மருதப்பன்: தேன் வளர்ப்புத் திட்டத்தை ஊக்குவிக்க வேண்டும். பண்ணைக்குட்டை விவசாயிகளுக்கு மானியத்தில் மீன்குஞ்சு வழங்க வேண்டும். ராமையா: மூங்கில்குடி பகுதியில் ஏற்பட்டுள்ள தண்ணீர்ப் பற்றாக்குறையை போக்க வேண்டும். இதற்குப் பதிலளித்து மாவட்ட ஆட்சியர் சி. நடராசன் பேசியது: மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. மாவட்டத்தில் 10 ஒன்றியத்துக்குள்பட்ட 27 பிர்காவில் 1,76,004 விவசாயிகளுக்கு 2012-13-ம் ஆண்டுக்கான பயிர்க் காப்பீடுத் தொகை ரூ. 277 கோடி விரைவில் வழங்கப்படவுள்ளது என்றார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் பு. மணிமாறன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் க. மயில்வாகனன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### தென்னையில் வேர் வாடல்நோய் பாதித்த மரங்களுக்கு நிவாரணம்

தென்னை மரங்களில் ஏற்பட்டுள்ள வேர்வாடல் நோயால் பாதிக்கப்பட்ட மரங்களுக்கு நிவாரணமாக ரூ. 500 மானியம் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சியர் எஸ். நாகராஜன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

குமரி மாவட்டத்தில் தென்னைவேர்வாடல் நோய் பரவலாக காணப்படுகிறது. இந்நோய் பைட்டோபிளாஸ்மா என்ற ஒரு வகையான மிக நுண்ணிய உயிரினத்தால் ஏற்படுகிறது. இந்நோயால் தாக்கப்பட்ட மரங்களின் நடுவில் உள்ள இலைகள் உள்நோக்கி வளைந்து அல்லது மாட்டுவிலா எலும்புகள் போல் காட்சியளிக்கும். நாளடைவில் நோயின் பாதிப்பு அதிகப்படும் போது மரத்தின் அடியில் உள்ள இலைகள் மஞ்சள் நிறமாக மாறி பின் இலை ஓரங்களில் கருகலும் உண்டாகும். நோய் பாதிக்கப்பட்ட மரத்தின் குருத்து இலை சத்து இழந்து காணப்படும். பாதிக்கப்பட்ட மரம் மடிந்து விடாமல் நாள்பட இருக்கும். எனினும் நோயினால் மரத்தின் வீரியம் சிறிது, சிறிதாக குறைந்து விடும். இதனால் மரத்தில் காய்கள் குறைந்து மகசூல் பாதிக்கப்படும். இந்நோய் தாக்கப்பட்ட மரத்தில் இருந்து பிற மரங்களுக்கு சாறு உறிஞ்சும் பூச்சிகளான கண்ணாடி இறக்கை நாவாய் பூச்சி மற்றும் தத்து பூச்சியால் பரவுகிறது. எனவே இந்நோயினால் பாதிப்படைந்த மரங்களை

உடனடியாக வெட்டி அகற்ற வேண்டும். இவ்வாறு மரங்களை வெட்டி அகற்றுவதற்கு தென்னை வளர்ச்சி வாரியம் மூலம் ஒரு மரத்திற்கு ரூ.500 வீதம் மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் வட்டாரத்தில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களை அணுகி வட்டார வேளாண் உதவி இயக்குநர்களிடம் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பித்த விவசாயிகளின் நிலங்கள் பார்வையிடப்பட்டு, சம்பந்தப்பட்ட வேளாண் உதவி இயக்குநர்கள் மூலம் மரங்களை வெட்டி அகற்றுவதற்கான உத்தரவு வழங்கப்படும். அதன்பின் மரங்களை வெட்டி அகற்றியதை களப்பணியாளர்கள் மீண்டும் பார்வையிட்டு விவசாயிகளுக்கு மானியம் வழங்க பரிந்துரை செய்வர். எனவே இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் அனைவரும் பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## நடமாடும் நெல் கொள்முதல் நிலையம் தேவை

திருநெல்வேலி மாவட்டத்தில் கார்பருவ சாகுபடி அறுவடைப் பணிகள் இன்னும் சில வாரங்களில் தொடங்கப்பட உள்ளதால் நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், ஆட்சியர் அலுவலக வளாத்தில் உள்ள வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் உமாமகேஸ்வரி தலைமை வகித்தார். ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பாலசுப்பிரமணியம் உள்பட பல்வேறு துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர். கூட்டத்தில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் ஆர்.கசமுத்து: திருநெல்வேலி மாவட்டத்தில் கார்பருவ சாகுபடி செய்யப்பட்டுள்ள இடங்களில் இன்னும் சில வாரங்களில் அறுவடைப் பணிகள் நடைபெறும் வாய்ப்பு உள்ளது. எனவே, இம் மாவட்டத்தில் நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் விவசாயிகளிடம் நேரடியாக நெல்கொள்முதல் செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். திருந்திய நெல் சாகுபடிக்கு மானியத்தொகை இதுவரை வழங்கப்படவில்லை. அதை வழங்குவதோடு, அந்தத் தொகையை ஹெக்டேருக்கு ரூ.5 ஆயிரமாக அதிகரிக்க வேண்டும். அதிகாரிகள்: இதுகுறித்து பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாநில துணைத் தலைவர் ஏ.எம்.பழனிச்சாமி: சிவகிரி வட்டம், ராயகிரி அருகே உள்ள ராஜசிங்கப்பேரி குளத்தில் கரம்பை மண் அள்ளுவதற்கு அனுமதி

கோரி கனிமவளத் துறைக்கு விண்ணப்பித்து, பின்பு அங்கிருந்து கடிதம் பெற்ற விவசாயிகள் வட்டாட்சியர் மற்றும் செயற்பொறியாளர் அலுவலகங்களில் அனுமதிபெற பல நாள்களாக முயன்றும் பலனில்லை. பருவமழைத் தொடங்க உள்ள நிலையில் அதிகாரிகளின் அலட்சியத்தால் கரம்பை மண் அள்ள முடியாத நிலை ஏற்படும் சூழல் உள்ளது. மாவட்ட வருவாய் அலுவலர் உமாமகேஸ்வரி: இதுகுறித்து விசாரித்து வரும் திங்கள்கிழமை அனுமதி அளிக்க சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். குறிச்சி கணேசன்: மாநகராட்சிக்குள்பட்ட பகுதிகளில் விளை நிலங்களில் கட்டுமானப் பணிகள் அதிகளவில் உருவாகிவருவதை தடுக்க வேண்டும். அதிகாரிகள்: கிராமப்புறங்களைப் பொருத்தவரை நன்செய், புன்செய் நிலங்களில் கட்டுமானப் பணிகளைத் தொடங்கும்போது அந்த நிலம் 5 ஆண்டுகளுக்கும் மேலாக தரிசாக கிடக்கிறது என்ற சான்று பெற வேண்டியது சட்டப்படி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆனால், மாநகராட்சிப் பகுதிகளில் அத்தகைய கடுமையான விதிமுறைகள் சட்டப்படி இல்லை. விவசாயிகள் கோரிக்கை குறித்து அரசுக்கு தெரிவித்து புதிய சட்டங்கள் இயற்றக் கோரப்படும்.

### 3.5 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

கடலூர் மாவட்டத்தில் உள்ள சுமார் 3.5 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. கோமாரி நோய் பொதுவாக குளிர், பனிக் காலங்களில் ஏற்படுகிறது. இந்த நோய் காற்றின் மூலம் பரவும் தன்மை கொண்டது. நோய் பாதிக்கப்பட்ட மாடுகளின் சிறுநீர், பால், உமிழ் நீர், சாணம் ஆகியவற்றால் மற்ற கால்நடைகளுக்கும் பரவுகிறது. நோய் தாக்குதலுக்குள்ளான கால்நடைகள் தீவனம் உள்கொள்ளாது. அதிக காய்ச்சல் இருக்கும். நாக்கு, உதடு, கால் குளம்புகளுக்கு இடையில் நீர் கொப்புளங்கள் உருவாகி பின்பு புண் ஏற்பட்டு ஒரு வாரத்திற்கு குறையாமல் தீவனம் உள்கொள்ளாமல் இருக்கும். இந் நோய் கண்ட கால்நடையின் பாலை இளம் கன்றுகள் குடித்தால் கன்றுகள் இறக்க நேரிடும். கறவை மாடுகளில் பால் வற்றி மாடுகளின் நிறங்கள் மாறி வெயில் காலங்களில் அதிகப்படியான மூச்சு வாங்குதல் போன்ற அறிகுறிகள் தென்படுவதோடு, நோய் தாக்கிய பசுக்களில் சினை பிடிப்பு தடைபடுகிறது. தடுப்பூசி போட்டு, பாதிப்புகளிலிருந்து கால்நடைகளை காப்பாற்றலாம். கடலூர் மாவட்டத்தில் 3.5 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணி கடந்த 17-ம் தேதி தொடங்கியது. இதுவரை 1.60 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி

போடப்பட்டுள்ளது. இந்தப் பணி 3 வரும் அக்டோபர் 17-ம் தேதி வரை நடைபெறும். கடலூர் பச்சையாங்குப்பம் ஊராட்சியில் கோமாரி தடுப்பூசி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. முகாமிற்கு ஊராட்சிமன்றத் தலைவர் வீராசாமி தலைமை வகித்தார். கால்நடைத் துறை உதவி இயக்குநர் ஜி.என்.கணேசன், உதவி மருத்துவர் ஆர்.மோகன், கால்நடை ஆய்வாளர் தி.ராஜமச்சேந்திர சோழன், பராமரிப்பு உதவியாளர்கள் லட்சுமி, லலிதா ஆகியோர் 400-க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டனர். இந்தப் பணி தொடர்ந்து சான்றோர்பாளையம், கரையேறிவிட்டகுப்பம், மணக்குப்பம், கொடிக்கால்நகர், புருகீஸ்பேட்டை, வண்டிப்பாளையம் மற்றும் வடுகபாளையம் பகுதிகளில் நடைபெறவுள்ளது.

### சோளம் அறுவடை விழா: கால்நடைத்துறை உதவி இயக்குநர் ஆய்வு

உளுந்தூர்பேட்டை வட்டம், நொணையவாடி கிராமத்தில் கால்நடைத் தீவனப் பயிரான சோளம் அறுவடை விழா, வெள்ளிக்கிழமை தொடங்கியது. கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ், அக்கிராமத்தைச் சேர்ந்த ஒரு விவசாயி வயலில் இவ்விழா தொடங்கியது. விழுப்புரம் மாவட்டத்தில் முதன்முதலாக நடைபெற்ற இந்த கால்நடைத் தீவன சோளம் அறுவடை விழாவை கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் கே.குபேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியது: விழுப்புரம் மாவட்டத்தில் கால்நடைகளுக்கான தீவனப் பயிரான சோளத்தை, 50 சதவிகித மானியத்தில் விவசாயிகள் 1,700 ஏக்கர் அளவில் சாகுபடி செய்துள்ளனர். இதனை பயிர் செய்வதற்கு ஏக்கருக்கு ரூ.13,600 மான்யமாக அரசு வழங்குகிறது. விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ரூ.13,600-ஐ மான்யாக பெற்றுக்கொண்டு சோளப் பயிரை வளர்த்து கிலோவிற்கு ரூ.2 பெற்றுக்கொண்டு பால் கொள்முதல் நிலையத்திற்கு வழங்குவர். பால் கொள்முதல் நிலையத்தினர் அந்த தீவனப் பயிரை பெற்றுக்கொண்டு தங்களுக்கு பால் கொடுக்கும் வாடிக்கையாளர்களுக்கு கிலோ ரூ.1 வீதம் வழங்குவர் என்றார். இந்த கால்நடைகளுக்கான தீவன சோளப் பயிரை உற்பத்தி செய்வதற்கு விவசாயிகள் முன் வரவேண்டும். அதற்காக அரசு விவசாயிகளுக்கு மானியம் வழங்குகிறது என்றார். ஆய்வின்போது எலவனாசூர்கோட்டை கால்நடை மருத்துவர் இளவரசு, எறையூர் பால் உற்பத்தியாளர் சங்க செயலாளர் சார்லஸ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தினமலர்

## மண் பரிசோதனை முடிவுகள் தாமதம்: விவசாயிகள் வேதனை

உடுமலை :வேளாண்துறையில், மண் பரிசோதனை முடிவுகள் பல மாதங்கள் கழித்து வழங்கப்படுவதால், சாகுபடியில் நஷ்டத்தை சந்திப்பதாக விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர். உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில், விவசாயம் பிரதானமாக உள்ளது. பி.ஏ.பி., அமராவதி மற்றும் கிணற்றுப்பாசனத்திற்கு விவசாயிகள் தென்னை உட்பட நீண்ட கால பயிர்களையும், காய்கறி பயிர்களையும் பயிரிட்டு வருகின்றனர். தொடர்ச்சியாக விளைநிலத்தில் ஒரே வகையான பயிர்களை பயிரிடுவது, உரமேலாண்மையில் ஏற்படும் பிரச்னைகள் ஆகியவற்றால், விளைச்சல் பாதிக்கப்படுகிறது. ஒவ்வொரு சாகுபடியிலும் நஷ்டத்தை சந்திக்கும் விவசாயிகள் மண் பரிசோதனை செய்து அதன் முடிவுகளுக்கேற்ப உர, நீர் மேலாண்மையை மேற்கொள்ள வேண்டும் என வேளாண் துறை விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இதனால், விவசாயிகள் மண் பரிசோதனை செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். வேளாண் துறை வழிகாட்டுதல் அடிப்படையில், விளைநிலங்களில் குறிப்பிட்ட இடங்களில் மண் மாதிரிகளை எடுத்து மண் பரிசோதனைக்காக வேளாண் துறையில் சமர்ப்பிக்கின்றனர். இவ்வாறு, சமர்ப்பிக்கப்படும் மண் மாதிரிகளின் முடிவுகள் பல மாதங்கள் கழித்தே விவசாயிகளுக்கு கிடைப்பதாக புகார் எழுந்துள்ளது. மண் பரிசோதனை முடிவுகள் வரும் முன், சாகுபடி சீசன் துவங்குவதால், விவசாயிகள் தங்கள் வழக்கமான நீர் மற்றும் உர மேலாண்மையை மேற்கொள்கின்றனர். இதனால், வழக்கம் போல் விளைச்சல் சரிந்து விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. சமீபத்தில், உடுமலை அருகேயுள்ள ரெட்டிபாளையம் கிராமத்தில், வேளாண்துறை சார்பில், பல்வேறு விவசாயிகளிடம் மண் பரிசோதனைக்காக மண் மாதிரிகள் பெறப்பட்டுள்ளது. இந்த மாதிரிகளின் முடிவுகள் இதுவரை விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை.இது குறித்து விவசாயிகள் கூறியதாவது: மண் பரிசோதனை முடிவுகள் மிக தாமதமாக வழங்கப்படுகிறது. எங்கள் பகுதியில் காய்கறி சாகுபடியில் தொடர்ந்து விளைச்சல் குறைந்து வருகிறது. இப்பிரச்னைக்காக, வேளாண்துறையிடம் மண் மாதிரிகளை வழங்கினோம். ஆனால்,

எவ்வித முடிவுகளும் தெரிவிக்கப்படவில்லை. இதனையடுத்து, பல விவசாயிகள் நிலத்தில் வெண்டை பயிரிட்டனர். மண்ணிலுள்ள பிரச்னைகள் காரணமாக செடிகள் அதிகளவு கருகி விட்டன. இதனால், ஏக்கருக்கு பல ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இந்த அவலத்தை தவிர்க்க வேளாண் துறையினர் மண் பரிசோதனை முடிவுகளை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

## நெற்பயிர்கள் காய்ந்து வருவதால் விவசாயிகள் கவலை : குடத்தின் மூலம் தண்ணீர் தெளிக்கும் அவலம்

பரங்கிப்பேட்டை:பரங்கிப்பேட்டை ஒன்றிய பகுதிகளில் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்ட நெற்பயிர்கள் தண்ணீர் இன்றி காய்ந்து வருவதால் பயிர்களைக் காப்பாற்ற விவசாயிகள் குடத்தின் மூலம் தண்ணீரை எடுத்து சென்று நெற்பயிர்கள் மீது தெளித்து வருகின்றனர்.தமிழகத்தில் போதிய மழை இல்லாதது, கர்நாடகா மாநிலத்தில் இருந்து தண்ணீர் திறந்து விடாதது உள்ளிட்ட காரணங்களால் இந்த ஆண்டு குறுவை சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் தவித்து வந்தனர். இந்நிலையில் கர்நாடகா மாநிலத்தில் பெய்த கன மழையால் மேட்டூருக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதனால் மகிழ்ந்த விவசாயிகள் இந்தாண்டு பாசனத்திற்கு தண்ணீர் பிரச்னை இருக்காது என நம்பினர். கடந்த 20 நாட்களுக்கு முன் பரவலாக மழை பெய்ததால் விவசாயம் செய்ய தண்ணீர் பஞ்சம் இருக்காது என நினைத்து அனைத்து இடங்களிலும் விவசாயிகள் நேரடி நெல் விதைப்பில் ஈடுபட்டனர்.பரங்கிப்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட கொத்தட்டை, கரிக்குப்பம், பெரியகுமட்டி, சின்னகுமட்டி, வில்லியநல்லூர், புதுச்சத்திரம், தச்சகாடு, சேந்திரக்கிள்ளை உட்பட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் நஞ்சை, புஞ்சை நிலங்களில் விவசாயிகள் நேரடி நெல் விதைப்பில் ஈடுபட்டனர். தற்போது நெற்பயிர்கள் நன்கு வளர்ந்து வரும் நிலையில் வீராணம் ஏரியில் தண்ணீர் குறைந்துள்ளதால் பாசன வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. இதன் காரணமாக நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்ட நெற்பயிர்கள் காய்ந்து வருகிறது.இதனால் விவசாயிகள் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்டது போல் இந்தாண்டும் பாதிப்பு ஏற்பட்டு விடுமோ என கவலையடைந்து வருகின்றனர். ஒரு சில விவசாயிகள் நெற்பயிர்களை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என மன தைரியத்தில், தங்களுடைய நிலங்களில் சிறிய அளவிலான குட்டையை வெட்டி அதில் கிடைக்கும் தண்ணீரை கொண்டு குடங்களின் மூலம் எடுத்துச் சென்று நெற்பயிர்களில் தெளித்து வருகின்றனர். வசதிபடைத்தவர்கள் இன்ஜின் மூலம் நெற்பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.தற்போது உள்ள சூழ்நிலையில்

இயற்கை கைகொடுத்து மழை பெய்தால் மட்டுமே நெற்பயிர் களை காப்பாற்ற முடியும் என்பது மட்டுமே உண்மை.

## தண்ணீரின்றி கருகும் நெற்பயிர்கள்காரைக்கால் விவசாயிகள் வேதனை

காரைக்கால்:காரைக்காலில் சம்பா சாகுபடிக்கு போதிய தண்ணீர் இல்லாததால் நெற் பயிர்கள் காய்ந்து சருகாக மாறி வருகின்றன.காரைக்கால் மாவட்டத்தில் விவசாய நிலங்கள் குறைந்துகொண்டே வருகிறது. பல இடங்களில் நிலங்கள் மனைகளாகவும், தொழிற்சாலைகளாகவும் உருமாறி வருகின்றன. சில விவசாயிகள் மட்டுமே பல சிரமங் களுக்கு இடையே விவசாயம் செய்து வருகின்றனர்.காரைக்கால் காவிரியின் கடைமடை பகுதியில் அமைந்துள்ளது. மாவட்டம் முழுவதும் நிலத்தடி நீரில் உப்புத்தன்மை உள்ளதால் ஆற்று நீர் பாசனத்தையே நம்பி விவசாயம் நடக்கிறது. ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே விவசாயம் செய்யப்படும். பருவ மழை காலங்களில் ஆற்றில் பெருக்கெடுத்து வரும் மழை நீரைக் கொண்டே சம்பா நெல் சாகுபடி நடக்கும்.இந்த ஆண்டு பருவமழை இன்னும் துவங்காததால் காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து குறைவாக உள்ளது. கல்லணையில் இருந்து திறந்துவிடப்படும் காவிரி நீரும் காரைக்கால் கடைமடைக்கு வருவதற்குள் பாதியாக குறைந்து விடுகிறது.இந்நிலையில் பருவ மழையை எதிர்பார்த்து பயிரிட்ட நெற்பயிர்களும் காய்ந்து கருகி வருகின்றன. அரசு பல இடங்களில் போர்வெல் அமைத்துக் கொடுத்தாலும், போர்வெல் இயங்குவதில்லை. காரைக்கால் மாவட்டத்தில் பல ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெல் பயிரிட்ட விவசாயிகள், பாசனத்திற்கு தண்ணீர் இல்லாததால் ஆறு மற்றும் வாய்க்கால் முலம் தண்ணீரை ஆயில் மோட்டார் மற்றும் ஏற்றுக்குடை போட்டு நெல் பயிர்களை பாதுகாத்து வருகின்றனர்.புதுச்சேரி அரசு தமிழக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, காவிரியிலிருந்து கூடுதலான தண்ணீர் திறந்து விட வலியுறுத்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

## வெங்காயம் சாகுபடி: விவசாயிகள் மகிழ்ச்சி

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி பகுதியில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு லாபம் கிடைத்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கள்ளக்குறிச்சி, சின்னசேலம், சங்கராபுரம் பகுதி விவசாயிகள் பலர் சின்னவெங்காயம் பயிரிட்டு இருந்தனர். மேலும் மஞ்சளில் ஊடுபயிராகவும் சின்ன வெங்காயம் பயிரிடப்பட்டது. ஊடுபயிரில் நன்றாக விளைந்துள்ள வெங்காயத்தினை விவசாயிகள் அறுவடை செய்து வருகின்றனர். தற்போது வெங்காய விலை அதிகரித்துள்ளதால் வெளிமாநிலத்தில் கொள்முதல் செய்வதை தவிர்த்து வெங்காயம் சாகுபடி செய்த விவசாயிகளிடம் நேரடியாக சென்று உள்ளூர் வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். ஒரு

கிலோ வெங்காயம் ரூ.35க்கு மேல் விற்கிறது. மார்க்கெட்டில் ஒரு கிலோ வெங்காயம் 50 ரூபாய்க்கு விற்கிறது. வெங்காய விலை ஏற்றத்தால் சாகுபடி செய்த உள்ளூர் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## 470 மாடுகளுக்கு தடுப்பூசி

விழுப்புரம்:விழுப்புரம் மகாராஜபுரத்தில், கோமாரி நோயால் பாதித்த 470 மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.விழுப்புரம் மகாராஜபுரம், மாரியம்மன் கோவில் தெருவில் மாடுகளுக்கு கோமாரி நோய் பாதிப்பு ஏற்பட்டது. இது குறித்து தினமலர் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டது.இதையடுத்து கால்நடை பராமரிப்பு துறை மூலம் கோமாரி தடுப்பூசி அப்பகுதியில் போடப்பட்டது. மண்டல இயக்குனர் அழகரசன், உதவி இயக்குனர் சுந்தர்ராஜன் ஆகியோர் மேற்பார்வையில், டாக்டர்கள் ராஜா சிதம்பரம், பாலாஜி, சிவக்குமார், கால்நடை ஆய்வாளர்கள் திருஞான சேகர், ஏசுதாஸ், துரைராஜ், முத்துகிருஷ்ணன், செல்வகுமார், அரிபுத்திரன், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் மணி, பழனியம் மாள், ரங்கநாதன் தடுப் பூசி போடும் பணியில் ஈடுபட்டனர். இதில் 470 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப் பட்டது.

## சின்ன வெங்காயத்தில் நோய் தாக்குதல் பயிரிட்ட விவசாயிகள் பெரும் சோகம்

பனமரத்துப்பட்டி : பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், சின்ன வெங்காய பயிரில், இலைப்பேன், தாள் கருகல், வேர் அழுகல் நோய் தாக்கியுள்ளது. விலை உயர்ந்து வரும் நிலையில், நோய் தாக்கி, விளைச்சல் பாதிக்கப்படுவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். சேலம் மாவட்டத்தில், பனமரத்துப்பட்டி, அயோத்தியாப்பட்டணம், மேட்டூர், கொளத்தூர், வீரபாண்டி, ஓமலூர், வாழப்பாடி, தலைவாசல் வட்டாரத்தில், சின்னவெங்காயம் அதிகளவில் பயிர் செய்யப்படுகிறது. நடப்பாண்டில், சின்னவெங்காயத்தில், இலைப்பேன், வேர் அழுகல் நோய், தாள் கருகல் நோய் தாக்கியுள்ளது. பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், இலைப்பேன்கள், வெங்காயத்தின் குருத்து, தாள் பகுதி சாறு உறிஞ்சி, பசுமையை சுரண்டி விடுவதால், இலை நுனி வாடி, காய்ந்து விடுகிறது. தாள் அழுகல் நோயால், தாளின் நுனியில் சிறிய வெள்ளை புள்ளிகள் தோன்றி, அடிப்பகுதி வரை பரவி, தாள் முழுவதையும் கருக செய்து விடுகிறது. கருகிய

தாள் ஒடிந்து மண்ணில் சாய்ந்து விடுகிறது. இதனால், மண்ணில் உள்ள வெங்காயம் வளர்ச்சியின்றி, மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. வேர் அழுகல் நோய் தாக்கிய தாள்கள், மஞ்சள் நிறமாக மாறி, காய்ந்த தாள்களை பிடுங்கினால், அழுகிய நிலையில், வெங்காயம் காணப்படுகிறது. வெண்மை நிற பூசணம் போல், வெங்காயம், வேர் பகுதியில் படர்ந்துள்ளது. விலை அதிகரித்து வரும் நிலையில், நோய் தாக்கி, விளைச்சல் பாதிக்கப்பட்டதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய, பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் கீதா கூறியதாவது: இலைப்பேன் தாக்கினால், 25 முதல், 80 சதம் மகசூல் பாதிக்கும். இதை கட்டுப்படுத்த, மீதையல் டெமட்டான் அல்லது டைமெத்தோயேட் 2மி., ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும். பின், 15 நாட்கள் கழித்து தண்ணீரை மூன்று முறை தெளிக்க வேண்டும். தாள் கருகல் நோயை கட்டுப்படுத்த, ஒரு லிட்டர் தண்ணீரில், காப்பர் ஆக்ஸி குளோரைடு மூன்று கிராம் அல்லது மான்கோசெப் இரண்டு கிராம் கலந்து, 10 நாட்கள் இடைவெளியில், இரண்டு முறை தெளிக்க வேண்டும். வெங்காயம் அழுகல் நோயை கட்டுப்படுத்த, நடவு செய்த, 30 நாளில், டிரைக்கோடெர்மா விரிடி என்ற எதிர் உயிர் பூசணத்தை, ஹெக்டேருக்கு ஐந்து கிலோ வீதம், 100 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து இடவேண்டும். நோய் தாக்கிய செடியை வேரோடு பிடுங்கி எடுத்துவிட்டு, அந்த இடத்தில், காப்பர் ஆக்ஸி குளோரைடு பூஞ்ஞானம் கொல்லி மூன்று கிராம், ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து ஊற்ற வேண்டும்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## விவசாயிகளுக்கான பயிற்சி முகாம்

ராசிபுரம்: வேளாண் துறை சார்பில், விதை கிராமத்திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கான பயிற்சி முகாம், ராசிபுரம் அடுத்த கூனவேலம்பட்டிபுதூரில் நடந்தது. வேளாண் உதவி இயக்குனர் வரதராஜு தலைமை வகித்தார். விதை சான்று அலுவலர் கவுதமன், விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள், விதை சான்று நடை முறைகள் குறித்து விளக்கினார். வேளாண் அலுவலர் ஜெயமாலா, நிலக்கடலை சாகுபடி தொழில் நுட்பம், மானியத் திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். தோட்டக்கலை அலுவலர் சுப்ரமணியம்,

தோட்டக்கலையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், வழங்கும் மானியங்கள் குறித்து பேசினார். முகாமில், விவசாயிகளுக்கு இடு பொருட்கள் வழங்கப்பட்டது.

### வேளாண் காப்பீட்டு திட்டத்தில் நிலக்கடலை பயிருக்கு காப்பீடு

மோகனூர்: மோகனூர் வேளாண் உதவி இயக்குனர் விஜயராகவன் வெளியிட்ட அறிக்கை: மோகனூர் வட்டாரத்தில், பரளி, தோளூர், பெரமாண்டம்பாளையம் கிராமங்களில், நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகள், திருத்தியமைக்கப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், நிலக்கடலை பயிருக்கு காப்பீடு செய்து கொள்ளலாம். இத்திட்டத்தின் கீழ், விவசாயிகள் அதிகபட்சம் ஒரு ஏக்கருக்கு, 17 ஆயிரத்து, 968 ரூபாய் காப்பீடு செய்து கொள்ள மொத்தப் பிரிமியத்தொகை, 1,617 (காப்பீடு தொகையில் ஒன்பது சதவீதம்). அதில், 50 சதவீதம் அரசு மானியமாகவும், மீதி, 50 சதவீதம் விவசாயி கட்டவேண்டிய பிரிமியமாகும். திருத்தியமைக்கப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில், நிலக்கடலை பயிருக்கு, காப்பீடு செய்து கொள்ள, செப்டம்பர், 30 கடைசி நாள். மேற்கண்ட கிராமங்களை சேர்ந்த நிலக்கடலை சாகுபடி செய்துள்ள காப்பீடு செய்ய விருப்பம் உள்ள விவசாயிகள், தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலர்களையோ, மோகனூர் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தையோ அல்லது தங்கள் பகுதி தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தையோ அணுகி காப்பீடு செய்து கொள்ளலாம்.இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

### காய்ந்து வரும் நெற்பயிர் தண்ணீர் திறக்க கோரிக்கை

ஈரோடு: கீழ்பவானி வாய்க்காலில் போதிய அளவு தண்ணீர் கிடைக்காததால், தண்ணீர்பந்தல்பாளையத்தில் நெற்பயிர்கள், காய்ந்து வருவதாகவும், வீணாகும் முன்பாக உயிர் நீர் வழங்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஈரோட்டில், விவசாயிள் குறைதீர் கூட்டம், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) சுகுமார் தலைமையில் நடந்தது. கூட்டத்தில் தண்ணீர் பந்தல்பாளையம் பகுதி விவசாயிகள் தண்ணீர் கேட்டு மனு கொடுத்தனர். மனுவில் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில் எல்.பி.பி., வாய்க்காலம் மூலம், 2.07 லட்சம் ஏக்கர் பாசன வசதியை பெறுகிறது. மெயின் வாய்க்கால், கிளை வாய்க்கால் மூலம் வரிசைப்படி தண்ணீர் திறக்கப்படுகிறது. நடப்பு சம்பா பருவத்துக்கு,

எல்.பி.பி.,யின் கிளை வாய்க்காலான, கங்காபுரம்- தண்ணீர்பந்தல்பாளையம் கிளை வாய்க்காலில், நெல் விதைப்புக்கு ஒரு வாரகாலம் தண்ணீர் வழங்கினர். 200 ஏக்கரில் நெல் நாற்று விடப்பட்ட நிலையில், தண்ணீர் நிறுத்தப்பட்டது. பயிர் வளர்ச்சிக்கு தண்ணீர் கிடைக்காமல், நெற்பயிர்கள் காய்ந்து வீணாகிறது. எனவே, கூடுதலாக தண்ணீர் திறக்க வேண்டும், என்றனர். பொதுப்பணித்துறையினர், நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர்.

## நாளொன்றுக்கு ரூ.10 லட்சத்துக்கு கொள்முதல் :நெல் பயிரிட்ட விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை

ஈரோடு: நவம்பர் மாதம் நெல் அறுவடை துவங்குவதால், தினமும், 10 லட்சம் ரூபாய்க்கு விவசாயிகளிடம் நெல்லை, இந்திய உணவுக்கழகம் கொள்முதல் செய்ய வேண்டும், என விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். ஈரோட்டில், விவசாயிகள் குறைதீர் கூட்டம், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) சுகுமார் தலைமையில் நடந்தது. கூட்ட விவாதம் வருமாறு: தமிழக விவசாயிகள் சங்கம் பெரியசாமி: நடப்பாண்டு கீழ்பவானியில் பாசனத்துக்கு, 2,560 கனஅடி தண்ணீர் திறந்த போதிலும், அரச்சலூர் பகுதியில், 100 கனஅடி பதிலாக, வெறும், 27 கனஅடி தண்ணீர் கிடைத்துள்ளது. விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் உழவுக்கு, கூட்டுறவு சொசைட்டிக்கு வழங்கிய டிராக்டர்களுக்கு டிரைவர்கள் இல்லை. கூட்டுறவு வங்கியில் பயிர்கடன் பெற, தேசிய வங்கியில் என்.ஓ.சி., வழங்கிட, ஐ.ஓ.சி., கனரா வங்கியில் கையெழுத்துக்கு, 50 ரூபாய் வசூலிக்கின்றனர். பொ.ப.துறை அதிகாரி பெரியசாமி: மேல்பகுதியில் நடவு பணிகள் முடிந்ததும், கீழ்பகுதிக்கு நான்கு நாளில் தண்ணீர் வழங்கப்படும். சக்தி சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்கம் சென்னியப்பன்: சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகம், 190 நாட்கள் ஆகியும், நிலுவையை செலுத்தவில்லை. வங்கிக்கடனை செலுத்தாததால், பயிர்கடன் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகம்: கரும்பு நிலுவை தொகை, 33.87 கோடியில் இதுவரை, 12.47 கோடி வழங்கியுள்ளோம். 30ம் தேதி கூட்டத்துக்கு முன்பாக, 12.50 கோடியும், அக்டோபர், 15ம் தேதிக்குள் எஞ்சிய, 8.5 கோடி ரூபாய் வழங்கப்படும். தடப்பள்ளி அரக்கன்கோட்டை விவசாயிகள் சங்கம் தளபதி: நடப்பாண்டு நவம்பர் மாத மத்தியில், தடப்பள்ளி பாசன பகுதியில், நெல் அறுவடை

துவங்கவுள்ளது. நெல்லுக்கான விலை அறிவிக்கப்பட்டதால், முதற்கட்டமாக, தடப்பள்ளி பாசன பகுதியில், 14 நெல் கொள்முதல் நிலையங்கள் அமை த்து, தினமும், 10 லட்சம் ரூபா ய்க்கு நெல் கொள்முதல் செய்ய, இந்திய உணவு கழகத்துக்கு, அரசு உத்தரவிடவேண்டும். இந்திய உணவு கழக அதிகாரி: தினமும், 4 லட்சத்துக்கு கொள்முதல் செய்யலாம். காலிங்கராயன் பாசன சபை வேலாயுதம்: மூலக்கரை சாயப்பட்டறை உரிமையாளர், அரசுக்கு எதிராக, தீர்ப்பாயம் சென்ற நிலையில், மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளின் நிலைப்பாடு என்ன. ஆற்றுக்கு, 5 கி.மீ., வாய்க்காலுக்கு, 1 கி.மீ., தூரத்துக்கு தொழிற்சாலை துவக்க தடையுள்ளது. ஜீரோ டிஸ்சார்ஜ் சான்றுபெற்றால் விலக்கு அளிப்பதாக வரும் தகவல் தெரிவிக்கின்றனர். சுற்றுச்சூழல் உதவி பொறியாளர் உதயகுமார்: மாவட்ட கூட்டுக்குழு சார்பில், தீர்ப்பாயத்தில் எதிர்மனு தாக்கல் செய்துள்ளோம். ஜீரோ டிஸ்சார்ஜ் யூனிட்டுக்கு விதிவிலக்கு ஏதுமில்லை. நுகர்வோர் பாதுகாப்பு குழு குழந்தைவேலு: 1982ம் ஆண்டு, மன்றம் துவங்கிய நாள் முதலாக, விவசாயிகள் பயிர்கடன் வாங்க ஏதுவாக, பட்டா பாஸ் வழங்க கோரி வருகிறோம். காலிங்கராயன் அணைக்கட்டு பலம் இழந்து வருவதால், புதுப்பிக்க வேண்டும். பொ.ப.துறை அதிகாரி பெரியசாமி பிரகலாதன்: அணைக்கட்டை, நபார்டு திட்டத்தில் சீரமைக்க, நிதி வழங்க பரிந்துரை செய்துள்ளனர். நிதி கிடைத்ததும் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும், என்றார்.

## காரட் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்

கோத்தகிரி:கோத்தகிரி பகுதியில் காரட் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கோத்தகிரி பகுதியில் தேயிலை விவசாயத்திற்கு அடுத்தப்படியாக, நீர் ஆதாரமுள்ள இடங்களில் மலை காய்கறிகளான, காரட், பீன்ஸ், உருளைக்கிழங்கு மற்றும் பீட்ரூட் உள்ளிட்ட பயிர்கள் மேற்கொள்ளப்படுகிறது. இதில், காரட் விவசாயம் அதிக பரப்பளவில் பயிரிப்படுகிறது. தற்போது காரட் ஒரு கிலோ 24 முதல் 26 ரூபாய் வரை விலைக் கிடைத்துவருகிறது.இதனால், விவசாயிகள் காரட் பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது விதைக்கும் காரட்டுக்கு, மூன்று மாதம் கழித்து அறுவடை செய்யும் போது அதிக விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில், விவசாயிகள் காரட் பயிரிடுகின்றனர்.

## நடவு பணியில் விவசாயிகள்... விதை வெங்காயம் விலை அதிகரிப்பால் சுணக்கம்

திண்டுக்கல் : திண்டுக்கல் மாவட்டத்தில், விதை வெங்காயம் விலை அதிகரிப்பால், அறுவடைக்கு பின்பு எதிர்பார்க்கும் லாபம் கிடைக்காது என்ற அச்சத்தில் விவசாயிகள் நடவு பணியை துவக்குவதில் சுணக்கமடைந்துள்ளனர். தமிழகத்தில் கோவை, ஈரோடு, பெரம்பலூர், திருச்சி, மதுரை, தேனி மாவட்டங்களில் உள்ள 70 சதவிகித விவசாயிகள் சின்ன வெங்காயத்தை மட்டுமே தொடர்ந்து சாகுபடி செய்து வருகின்றனர். அறுவடைக்கு பின்பு 120 நாட்கள் வரை வெங்காயத்தை இருப்பு வைத்துக்கொள்ளலாம். அன்றைய விலை நிலவரத்திற்கேற்ப வெங்காயத்தை விற்று விவசாயிகள், லாபம் சம்பாதித்து வந்தனர். விளைச்சல் இல்லாததால் மார்ச்சில் வெங்காயத்தின் விலை கிலோ ரூ. 100 க்கு விற்பனை செய்யப்பட்டது. கடந்த 4 மாதங்களாக சில்லரை விலையில் ரூ. 70 க்கு விற்கப்படுகிறது. தற்போது சின்ன வெங்காயத்திற்கான நடவு பணி துவங்கியுள்ளது. இதற்கான விதை வெங்காயம் கிலோ ரூ. 60 க்கு விற்கப்படுகிறது. ஒரு ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்வதற்கு 400 கிலோ வெங்காயம் தேவைப்படும். அறுவடையாகும்வரை உள்ள தொகையை கணக்கிடும்போது தற்போதைய விலைக்கு ஒவ்வொரு விவசாயியும் ரூ. 50 ஆயிரம் வரை செலவு செய்ய வேண்டும். மூன்று மாதத்திற்கு பின், வெங்காயம் விலை வீழ்ச்சியடைந்தால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும். இதனால், நடவு பணியை துவக்காமல் விவசாயிகள் சுணக்கம் அடைந்துள்ளனர்.

## 90 ஆயிரம் மாடுகளுக்கு தடுப்பூசி கால்நடைத் துறையினர் தீவிரம்

கம்பம் : தேனி மாவட்டத்தில், 90 ஆயிரம் மாடுகளுக்கு "காணை' நோய் தடுப்பூசி போடும் பணியில் கால்நடை பராமரிப்புத் துறையினர் ஈடுபட்டுள்ளனர். கால்நடைகளில் பசுக்கள், எருமைகள், காளை மாடுகளுக்கு காலிலும், வாயிலும் புண் ஏற்படும். இதனால், ஒரு வாரத்திற்கு சாப்பிடாது. உடல் மெலியும். தேனி மாவட்டத்தில் காணை நோய் தடுப்பு நடவடிக்கையில் கால்நடை பராமரிப்புத் துறை தீவிரம் காட்டி வருகின்றனர். இந்த நோயை குணமாக்க 6 மாதங்களுக்கு ஒரு முறை தடுப்பூசி போட வேண்டும். தற்போது, 5 வது சுற்று தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. கடந்த சில நாட்களாக மாவட்டம் முழுவதும் உள்ள கால்நடை மருந்தகங்கள், மருத்துவமனைகள், உதவி மையங்கள், என அனைத்து கால்நடைபராமரிப்புத் துறை மையங்களிலும் காணை நோய் தடுப்பூசி போடும் பணி நடைபெற்று வருகிறது. இது தொடர்பாக இணை இயக்குநர் பாலகிருஷ்ணன்

கூறுகையில், " உயர் கலப்பின பசுக்கள் மற்றும் எருமைகளில், அதாவது அதிகமாக பால் கறக்கும் மாடுகளில் காணை நோய் தாக்குதல் இருக்கும். நாட்டு மாடுகளில் அதிகமாக இருக்காது. தேனி மாவட்டத்தில் 86 ஆயிரம் மாடுகள் உள்ளன. நாம் 5 ஆயிரத்தை இருப்பாக வைத்துக் கொண்டு, 85 ஆயிரம் மாடுகளுக்கு தடுப்பூசி போட திட்டமிட்டுள்ளோம். இதுவரை 9 ஆயிரத்து 600 மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு விட்டது. முற்றிலும் இலவசமாக போடப்படும் ,இந்த தடுப்பூசியை போட, பொதுமக்கள் முன்வர வேண்டும்' என்றார்.

தினகரன்

## 70 லட்சம் பேல்களுக்கு மேல் பருத்தி பஞ்சு ஏற்றுமதி செய்தால் 10% வரி: மத்திய ஜவுளித்துறை அமைச்சகம்



அதிக அளவில் பருத்தி பஞ்சு ஏற்றுமதி நடைபெறுவதை கட்டுப்படுத்தினால் உள்நாட்டில் அதன் விற்பனை விலையை சீர்படுத்த முடியும் என்று மத்திய ஜவுளித்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதன்படி 70 லட்சம் பேல்களுக்கு மேல் ஏற்றுமதி செய்தால் 10% வரி விதிக்கப்படும் என்றும் இதன் மூலம் நூல் விலையை கட்டுப்படுத்தும் வாய்ப்பு உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதிய நிலையில் நடப்பாண்டின் பருத்தி உற்பத்தி 3.70 கோடி பேல்களுக்கு அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 2.80 கோடி பேல்கள் நாடு முழுவதும் உள்ள நூற்பாலைகளுக்கு விநியோகிக்கப்படும் மேலும், 70 லட்சம் பேல்கள் ஏற்றுமதி செய்யப்படும். இதர 19 லட்சம் பேல் பருத்திப் பஞ்சு உபரியாக இருக்கும் என்றும் ஜவுளித்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

## எரிப்பூச்சியால் பாதித்த 8288 தென்னை மரங்களுக்கு மருந்து தெளிப்பு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு திட்டத்தில் நடவடிக்கை

கிருஷ்ணகிரி,: கிருஷ்ணகிரி மாவட்டம் அரசம்பட்டி பகுதியில் எரிப்பூச்சியால் பாதிக்கப்பட்ட 8288 தென்னை மரங்களுக்கு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மூலம் மருந்து தெளிக்கப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் ஒன்றியம் அரசம்பட்டி அருகே உள்ள பென்றஅள்ளி மற்றும் மஞ்சமேடு கிராமங்களில் சுமார் 250 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள தென்னை மரங்களில் 8288 தென்னை மரங்கள் நத்தைப் புழுக்கள் (எரிப்பூச்சிகள்) எனும் புதிய வகை புழுக்களின் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த புழுக்கள் பச்சை கலந்த மஞ்சள் நிறம், வெள்ளை கோடுகளுடன் 4 வரிசை ரோமங்களுடன், ரோமங்களின் நுனி சிவப்பு அல்லது கருப்பு நிறுத்துடன் காணப்படும். இந்த நத்தைப் புழுக்கள் தென்னை ஓலைகளை சுரண்டியும், கடித்தும் சாப்பிட்டு மிகபெரிய சேதத்தை உருவாக்கி, இதன் மூலம் மரங்கள் காய்ந்து காணப்படுகிறது. இதனால் பச்சையம் முழுவதும் சுரண்டப்பட்டு மரத்தின் வளர்ச்சி குன்றி, விளைச்சல் முழுவதும் பாதிக்கும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது.

இதை தடுக்க வேளாண்மை துறையை சேர்ந்த அதிகாரிகள் கொண்ட குழு கடந்த மாதம் 16ம் தேதி அரசம்பட்டியில் முகாமிட்டு, பாதிப்பிற்குள்ளாகியுள்ள தென்னந்தோப்புகளில் ஆய்வு செய்தனர்.

அப்போது, நத்தைப் புழுக்களை கட்டுப்படுத்த மருந்துகள் சிபாரிசு செய்து ஆலோசனைகளை வழங்கினர். அத்துடன் தென்னை விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த குறிப்புகள் அடங்கிய நோட்டீஸ்கள் வழங்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் ராஜேஷ் முன்னிலையில், மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ராதாகிருஷ்ணன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சுமதி, காவேரிப்பட்டணம் வேளாண்மை உதவி இயக்குநர் ராஜேந்திரன், வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) பச்சையப்பன், பையூர் மண்டல ஆராய்ச்சி நிலைய தலைவர் புத்தர், வேளாண்மை உதவி அலுவலர்கள்

மனோகரன், தனசேகர், அட்மா திட்ட அலுவலர் துரைசாமி மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் அனைவரும் பங்கேற்று, 250 ஏக்கர் பரப்பளவில் உள்ள சுமார் 8 ஆயிரத்திற்கும் அதிகமான தென்னை மரங்களுக்கு 5 டிராக்டர்கள் மூலம் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு அடிப்படையில் மவுண்டட் தெளிப்பானை கொண்டு மரங்களுக்கு மருந்து தெளித்தனர்.

அப்போது விவசாயிகளிடம் பேசிய அதிகாரிகள், தென்னந்தோப்புகளை உழவு செய்து சுத்தமாக வைத்திருக்க வேண்டும். ஊடுபயிராக கொள்ளுபயிர், தக்கப்பூண்டு, கொளுஞ்சி போன்ற பயிர்கள் பயிரிட வேண்டும். ஆண்டுக்கு இரண்டு முறை அரைவட்டப் பாத்தியின் மூலம் உரம் இடவேண்டும். அளவுக்கு அதிகமான தண்ணீரை வெளியேற்ற வடிகால் வசதி செய்திட வேண்டும். இவ்வாறு செய்வதால் இதுபோன்ற பாதிப்புகளை பெருமளவில் குறைக்கலாம் என்றனர்.

## அதிக விலை கிடைப்பதால் தர்மபுரி அங்காடிக்கு கொண்டு வர பட்டுக்கூடு விவசாயிகள் ஆர்வம்

சேலம், நாமக்கல் விவசாயிகள் குவிகின்றனர்

தர்மபுரி: தமிழகத்தில் பட்டுக்கூடு பரிவர்த்தனையில் தர்மபுரி பட்டுக்கூடு அங்காடி முதன்மையாக உள்ளது. தர்மபுரி மாவட்ட பட்டுக்கூடு விற்பனை அங்காடிக்கு விழுப்புரம், கன்னியாகுமரி, நாமக்கல், சேலம், கிருஷ்ணகிரி, ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து தினசரி சுமார் 60 முதல் 70 பட்டு விவசாயிகளும் 25 முதல் 30 பட்டு நூற்பாளர்களும் வந்து பட்டுக்கூடு பரிவர்த்தனையில் கலந்து கொள்கின்றனர். தினசரி 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் கிலோ பட்டுக்கூடுகள் பரிமாற்றம் செய்யப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் உள்ள தர்மபுரி, பென்னாகரம், பாலக்கோடு ஆகிய பட்டுக்கூடு அங்காடிகளில் ஆண்டுக்கு ரூ.15 கோடி மதிப்பில் பட்டுக்கூடுகள் பரிவர்த்தனை செய்யப்படுகிறது.

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது:

தர்மபுரி பட்டுக்கூடு அங்காடிக்கு தர்மபுரி கிருஷ்ணகிரி, ஈரோடு மாவட்டங்களில் இருந்து ஏராளமான விவசாயிகள் வருகின்றனர். இவர்களது பட்டுக்கூடுகளுக்கு அரசு நிர்ணயம் செய்த விலைக்கு ஏற்றவாறு அடிப்படை விலை நிர்ணயித்து ஏலம் விடப்படுகிறது.

இதற்கு வரியாக ஒவ்வொரு விவசாயியிடம் இருந்து ரூ.100க்கு 75 பைசா வசூலிக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு பட்டு கூட்டிற்கான பணம் உடனுக்குடன் அன்றைய தினமே வழங்கப்படுகிறது. வங்கி பரிவர்த்தனை மூலமாக பணம் வழங்குவதால் விவசாயிகள் ஏலத்திற்கு பின்னர் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியதில்லை.

நேற்று முன்தினம் (25ம் தேதி) வெண்பட்டு கிலோ ரூ.520க்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. விலை நிர்ணயம் விவசாயிகளின் நேரடி பார்வையில் செய்யப்படுகிறது. பட்டு கூடு அங்காடியின் ஏலத்தை கண்காணிக்க கேமரா வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாவட்ட நிர்வாக அலுவலகத்தில் இருந்து கண்காணிக்க முடியும்.

காஞ்சிபுரம் பட்டு இணையத்தில் (டான் சில்க்) பட்டு நூலுக்கு அரசு அன்றாடம் விலை நிர்ணயம் செய்கிறது. அதன் அடிப்படையில் விவசாயிகளின் பட்டுக்கூடுகளை 100 கிராம் எடை போட்டு, அவற்றை எண்ணி கணினியில் கணக்கிட்டு பட்டுக் கூட்டிற்கு அடிப்படை விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. நூற்பாளர்கள் ஏலம் எடுத்தவுடன் உடனடியாக விவசாயிக்கு பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. மேலும் இங்கு அரசின் அனைத்து மானிய திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறோம்.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர். கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலை அடுத்த ஆரல்வாய் மொழியை சேர்ந்த பட்டு விவசாயி பாலமுருகன் கூறும் போது, ‘‘நான் 2 ஏக்கர் பரப்பளவில் பட்டுக்கூடு வளர்த்து வருகிறேன். 1 மாதத்திற்கு 80 கிலோ பட்டுக்கூடு கிடைக்கிறது. பட்டுக்கூடு வளர்ப்பை கடந்த 1 வருடமாக செய்து வருகிறேன். மற்ற பட்டுக்கூடு அங்காடிகளை விட தர்மபுரியில் அதிக விலை கிடைப்பதால் இங்கு பட்டுகூடுகளை விற்க வந்தேன்,’’ என்றார்.

## மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி

மணப்பாறை: மணப்பாறை தியாகேசர் ஆலை மேல்நிலைப்பள்ளியில் தேசிய மாணவர் படை மாணவர்கள் சார்பில் மழைநீர் சேகரிப்பு பேரணி நடந்தது. பேரணியை பள்ளித் தலைமையாசிரியர் அருளரசன் கொடியசைத்து துவக்கி வைத்தார். கர்னல் கில்பர்ட், ஜே.சி.ஓ ரவி ஆகியோர் கலந்து கொண்டனர். பேரணியில் மாணவர்கள் மழைநீர்! உயிர்நீர்! மழைநீரை சேமிப்போம். நிலத்தடி நீரை உயர்த்துவோம்! என்ற வாசகத்தை

சொல்லி பேரணி சென்றனர். பேரணி பள்ளியிலிருந்து தொடங்கி காமராஜர் சிலை, முத்தன்தெரு, பெரியார் சிலை மற்றும் முக்கிய வீதிகள் வழியாக சென்று பள்ளியை வந்தடைந்தது. பேரணியில் 100க்கும் மேற்பட்ட தேசிய மாணவர் படை மாணவர்கள் கலந்து கொண்டனர். முதல் நிலை அதிகாரி முத்துக்குமார் நன்றி கூறினார்.

### வேளாண் கல்லூரி மாணவர்களுக்கு வயல்வெளி பாடம்

துறையூர்: புதியதாக துவங்கப்பட்ட துறையூர் இமயம் வேளாண்மைக் கல்லூரி முதலாம் ஆண்டு மாணவர்கள் 25ம் தேதி கண்ணனூர், மேலகொத்தம்பட்டி, காளியாம்பட்டி, மருக்கலாம்பட்டி, சின்னசேலம்பட்டி போன்ற கிராமங்களுக்கு நேரடியாக சென்று துவரை, சோளம், மரவள்ளிக்கிழங்கு, நிலக்கடலை, தட்டைப்பயிறு, கொத்தவரை, வாழை, கரும்பு, சூரியகாந்தி, தென்னை மற்றும் நெல் பயிர்களின் நடவு முறை, களையெடுத்தல், உரமிடல், நீர்பாய்ச்சுதல் போன்ற தொழில் நுட்பங்களை செயல் முறை செய்து கற்றறிந்தனர்.

ஒவ்வொரு பயிருக்கும் விதை முதல் அறுவடை வரை உள்ள பல்வேறு செய் நேர்த்திகளை பாடத்திட்டத்திற்கான ஆசிரியர்கள் பேராசிரியர் நைனா முகமது, உதவி பேராசிரியை சுகுணா மற்றும் கலைசெல்வி ஆகியோர் மாணவர்களிடம் விளக்கி கூறினர். மேலும் கடலையில் விழுது இறங்குவது பற்றியும், தென்னை பாளையில் காய் வைப்பது குறித்தும், நெல் பயிர்களின் பல்வேறு வளர்ச்சி பருவங்களை காண்பித்தும் விளக்கம் அளித்தனர்.

### விளை பொருட்களை சேமிக்க 5 இடங்களில் குளிர்சாதன கிட்டங்கி கட்டும் பணி தீவிரம்

திண்டுக்கல்: திண்டுக்கல் மாவட்டத்தில் விளைபொருட்களை சேமித்து வைப்பதற்காக மேலும் 5 இடங்களில் குளிர்சாதன கிட்டங்கிகள் கட்டப்பட்டு வருவதாக கலெக்டர் வெங்கடாசலம் கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம் பலக்கனூத்து தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில், ரூ.11 லட்சத்தில் 100 டன் கொள்ளவு கிட்டங்கி கட்டப்படுகிறது. இப்பணிகளை கலெக்டர் வெங்கடாசலம் ஆய்வு செய்தார். பின்பு அவர் நிருபர்களிடம் கூறியதாவது: மாவட்டத்தில் மொத்தம் 197 தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் உள்ளன.

இந்தச் சங்கங்களில் தற்போது ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து கிட்டங்கிகள் கட்டப்பட்டுள்ளன. இதில் ஆயிரம் டன் கிட்டங்கி ரூ.36 லட்சத்திலும், 100 டன் கிட்டங்கி ரூ.11 லட்சத்திலும், 500 டன் கிட்டங்கி ரூ.27 லட்சத்திலும் கட்டப்பட்டுள்ளன.
விளைவித்த பொருட் களை இந்த கிட்டங்கிகளில் வைத்துக் கொள்ளலாம். அறுவடையின்போது விலை குறைவாக இருந்தால், அவற்றை சேமித்து வைத்து கூடுதல் விலை கிடைக்கும்போது விளைபொருட்களை விற்பனை செய்யலாம். இப்பொருட்களின் மதிப்பு அடிப்படையில் 80 சதவீத அளவிற்கு கடன் வழங்கப்படும்.

நெல், மக்காச்சோளம் போன்ற நீண்ட நாட்கள் இருப்பில் வைக்கக்கூடிய விளைபொருட்கள் மட்டுமே சேமித்து வைக்கப்படும். குறுகிய காலத்தில் வைத்திருக்கக் கூடிய பொருட்கள், பழைய கிட்டங்கிகளில் மட்டுமே வைக்கப்படும்.

ஒட்டன்சத்திரத்தில் வேளாண் விற்பனை அங்காடி கட்டப்பட்டு வருகிறது. அய்யலூரில் தக்காளி கிட்டங்கி கட்ட அனுமதி கோரியுள்ளனர். 5 இடங்களில் குளிர்சாதன கிட்டங்கி கட்டப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டுறவு இணைப்பதிவாளர் செல்வக்குமரன், பழநி கூட்டுறவு சங்கத் துணைப்பதிவாளர் நடராஜன், சத்திரப்பட்டி கூட்டுறவு சங்க துணைப்பதிவாளர் செல்வராஜா, ஊராட்சிகளின் உதவி இயக்குநர்(பயிற்சி) கங்காதரணி, பலக்கனூத்து ஊராட்சி தலைவர் மணிகண்டன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### இலவச கால்நடை மருத்துவ முகாம்
சிங்கம்புணரி: சிங்கம்புணரி அருகே கிருங்காக்கோட்டையில் சேவுகா அரிமா சங்கம் சார்பில் இலவச கால்நடை மருத்துவமுகாம் நடைபெற்றது.

முகாமிற்கு ஊராட்சி தலைவர் ராசியப்பன் தலை மை வகித்தார். அரிமா சங்க செயலாளர் செல்வ குமார், பொருளாளர் செல் வராஜ் முன்னிலை வகித்த னர். இதில் கிருங்காக்கோட்டை மற்றும் சுற்று கிராம ங்களை சேர்ந்த 400 மாடுகளுக்கு தடுப்பூசியும், 25 மாடுகளுக்கு செயற்கை கருவூட்டல் செய்யப்பட்டது.

இதேபோல் 350 ஆடுகளுக்கு குடல்புழு நீக்கம், தடுப்பூசிகள் போடப்பட் டன. கால்நடை டாக்டர் கள் மோகன்ராஜ், தமிழரசி சிகிச்சையளித்த னர். சிறந்த காளை கன்றுகள் தேர்வு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம்

சிவகங்கை: சிவகங்கை மாவட்டத்தில் அக்.1 வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு அக்.1 முதல் 31 வரை சிறப்பு சுருக்க திருத்தம் நடக்க உள்ளது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, நீக்க, ஒரே தொகுதியில் பாகம் மாற்றம் செய்திட வாக்குச்சாவடி நிலை அலுவலரிடமோ, தாசில்தார் அலுவலகத்திலோ, ஆர்டிஓ அலுவலகத்திலோ மனு அளிக்கலாம்.

இதற்கான சிறப்பு முகாம் அக்.6, 20, மற்றும் 27 தேதிகளில் அந்தந்த வாக்குச்சாவடிகளில் நடக்க உள்ளது. அங்கீகரிக்கப்பட்ட இன்டர்நெட் மையங்களிலும் மனு அளிக்கலாம். இந்திய தேர்தல் ஆணைய வலைத்தளம் ஷ்ஷ்ஷ்.மீநீவீ.ஸீவீநீ.வீஸீ மற்றும் தலைமை தேர்தல் வலைத்தளம் ஷ்ஷ்ஷ்.மீறீமீநீtவீஷீஸீs.tஸீ.ஸீவீநீ.வீஸீ போன்ற வற்றில் மனுக்களை பதிவு செய்யலாம்.

## தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் 200 மூட்டை பருத்தி ஞ்4 லட்சத்திற்கு விற்பனை

நாமக்கல்: நாமக்கல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 200 மூட்டை பருத்தி ஞ்4 லட்சத்திற்கு ஏலம் போனது .

நாமக்கல் மாவட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. அதன்படி நேற்று நடைபெற்ற ஏலத்தில் நாமக்கல், மோகனூர், எருமைப்பட்டி, வளையப்பட்டி, புதுச்சத்திரம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த 80 விவசாயிகள் கலந்து கொண்டனர். இதில் விவசாயிகள் கொண்டு வந்திருந்த 200 மூட்டை பருத்தி ஞ் 4 லட்சத்திற்கு ஏலம் போனது . இதில் ஆர்சி எச் ரகம் ஒரு குவிண்டால் ஞ்5300 முதல் 5650 வரையிலும், டிசிஎச் ரகம் ஞ் 5500 முதல் ஞ் 5890 வரையிலும் ஏலம் போனது.

## ஓமலூர் பகுதியில் கனமழையிலும் நிரம்பாத ஊராட்சி குளங்கள் விவசாயிகள் வேதனை

ஓமலூர்: சேலம் மாவட்டத்தில் ஓமலூர் வட்டம் முழுமையாக விவசாயத்தினை மட்டுமே நம்பியுள்ள விவசாயிகளை அதிக அளவில் கொண்டுள்ள பகுதியாகும். ஓமலூர், தாரமங்கலம் மற்றும் காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியங்களில் 60க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் மழை நீர் சேகரிப்பினை செயல்படுத்தும் வகையில், ஊராட்சிக்கு ஒன்று என்ற விகிதத்தில், கி2 லட்சம் முதல் கி3 லட்சம் வரை, செலவிடப்பட்டு குளங்கள் அமைக்கப்பட்டன.

கோடிக்கணக்கில் செலவிடப்பட்டு உருவாக்கப்பட்ட இந்த குளங்கள், ஊராட்சியின் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டிருந்தாலும், இதுவரை ஒருமுறை கூட நிரம்பதாதது வேதனை அளிப்பதாக உள்ளதாக பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். மழை நீரை முழுமையாக சேகரிக்கும் வகையில் ஏரிகள் நிரம்பி வழிந்து, உபரி நீர் செல்லும் வழியில் இந்த குளங்கள் அமைக்கப்படாததே இதற்கு காரணமாகும். வாய்க்கால்கள், ஏரிகள் மற்றும் ஆற்றங்கரை என நீர்வழிப்பாதையில் அமைக்கப்படாத நிலையில், நீர் வரத்தின்றி வறண்டு காணப்படும் இந்தக் குளங்களில் தற்போது, முள்புதர்களும், பிளாஸ்டிக் குப்பைகளுமே மண்டி கிடக்கிறது. மழைநீர் சேமிப்பு என்ற உன்னத நோக்கத்தை குறிக்கோளாகக் கொண்டு உருவாக்கப் பட்ட இந்த நீர்நிலைகள் தற்போது மெல்ல மெல்ல ஆக்ரமிக்கப்பட்டு வருவதாக விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர். அண்மையில் சேர்வராயன் மலைப் பகுதியில் பெய்த கன மழை காரணமாக, சரபங்கா நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. டேனிஷ்பேட்டை தொடங்கி ஓமலூர் வட்டத்தின் எல்லைப் பகுதியான சின்னப்பம்பட்டி வரையி லான 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியும், எந்த ஊராட்சியிலும் குளங்களுக்கு ஒரு சொட்டு நீர் கூட செல்லவில்லை.

சம்பந்தப்பட்ட ஊராட்சி நிர்வாகங்களும் இதனை கண்டுகொள்ளவில்லை என பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர். நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால் பல்வேறு இடங்களில் குடிநீர் பிரச்னை ஏற்பட்டு, போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. சிறு குறு விவசாயிகளுக்கு தேவையான நீர் கிடைக்காததால் விவசாயத் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளை ஒருங்கிணைத்து, நிலையானதொரு கண்காணிப்பு அமைப்பை உருவாக்க வேண்டும் என்பதே ஓமலூர் பகுதி மக்களின் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பாக உள்ளது.

## விவசாயத்தை அரசு செலவில் இயந்திர மயமாக்க வேண்டும் தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை

கிருஷ்ணகிரி: விவசாயத்தை அரசு செலவில் இயந்திர மயமாக்க வேண்டும் என தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிருஷ்ணகிரி அடுத்த நாரலப்பள்ளி கிராமத்தில் தமிழக விவசாயிகள் சங்க கிளை துவக்க விழா நடந்தது. விழாவிற்கு ஒன்றிய செயலாளர் நாகராஜ் தலைமை வகித்தார். சங்க நிர்வாகிகள் வெங்கட்ராமன், முனிரெட்டி, ஜெயராமன், மேற்கு மாவட்ட நிர்வாகிகள் சந்திரசேகர், மாதுராஜ், கிருஷ்ணப்பா, ரமேஷ், தணிகாசலம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிளைத் தலைவர் நாராயணப்பா வரவேற்று பேசினார். நிகழ்ச்சியில் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் ராமகவுண்டர் பங்கேற்று, கிளை சங்கத்தை தொடங்கி வைத்தார். மாவட்ட நிர்வாகிகள் சுப்பிரமணிய ரெட்டி, வெங்கடேசன், ராஜா, நாகராஜ ரெட்டி, சரவணன், முனிராஜ், குப்பையன், ரவி, சரவணகுமார், ராமன், கண்ணன், ஆனந்தன், பிரகாஷ் உள்ளிட்டோர் பேசினர். நிகழ்ச்சியில் சங்க நிர்வாகிகள் வெங்கட்ராமன், லோகேஷ், ஜெயபால், பைரப்பன், வெங்கட்டசாமி, முனிசாமி, முருகேசன், அமர்நாத், முனிரெட்டி உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர். முடிவில் மாவட்ட துணைத் தலைவர் கண்ணன்(எ)சந்திரசேகர் நன்றி கூறினார்.
தென்பெண்ணை ஆற்றிலிருந்து உத்தனப்பள்ளி லாலுக்கல் வழியாக நாகமங்கலம் ஏரிக்கு கால்வாய் அமைத்து ஏரிகளுக்கு தண்ணீர் வழங்க வேண்டும். நாரலப்பள்ளிக்கு கூடுதல் பேருந்து வசதி செய்து தர வேண்டும்.

யானைகளால் ஏற்படும் பயிர் சேதத்திற்கு இழப்பீடாக ரூ.50 ஆயிரமும், மனித உயிர் இழப்பிற்கு இழப்பீடாக ஒரு நபருக்கு ரூ. 10 லட்சமும் தாமதமின்றி 15 நாட்களுக்குள் வழங்க வேண்டும். அரசு செலவில் விவசாயத்தை இயந்திரமயமாக்க வேண்டும். உற்பத்தி மானியம் ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம் வழங்க வேண்டும். 10 ஆண்டுகளுக்கு மேலாக அரசு நிலத்தில் விவசாயம் செய்பவர்களுக்கு நிபந்தனையின்றி பட்டா வழங்க வேண்டும். வருகின்ற அக்டோபர் மாதம் 10ம் தேதி கிருஷ்ணகிரியில் பால் விலையை உயர்த்த கோரி நடைபெறும் கவன ஈர்ப்பு பேரணி மற்றும் ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் கலந்துகொள்வது என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

## பிலிக்கல் பாளையம் சந்தையில் வெல்லம் விலை வீழ்ச்சி; விவசாயிகள் கவலை

கிருஷ்ணகிரி அரசு அருங்காட்சியகத்தில் பயிலரங்கம் தொடக்கம் கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அரசு அருங்காட்சியகத்தில் இரண்டு நாட்கள் தொல்லெழுத்து பயிலரங்கம் நடைபெறுகிறது. இதன் தொடக்க விழா நேற்று கிருஷ்ணகிரி அரசு அருங்காட்சியக காப்பாட்சியர் கோவிந்தராஜ் தலைமையில் நடந்தது. இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி ஆண்கள் கலைக்கல்லூரியின் தமிழ்த்துறை தலைவர் விஜயேந்திரன் மற்றும் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் ராஜா ஆகியோர் பங்கேற்று பேசினர். இந்நிகழ்ச்சியினை அருங்காட்சியக தொழில்நுட்ப உதவியாளர் திருவள்ளுவன், பணியாளர்கள் கிருஷ்ணன் மற்றும் செல்வகுமார் ஆகியோர் ஒருங்கிணைத்து நடத்தினர். இப்பயிலரங்கில் கிருஷ்ணகிரி ஆண்கள் கலைக் கல்லூரி தமிழ்த்துறை முதுகலை மாணவர்கள் 50 பேர் கலந்துகொண்டு பயிற்சி பெற்று வருகின்றனர். இதில் மாணவர்களுக்கு பிராமி என்னும் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் எழுத்துக்களை எழுதவும், படிக்கவும் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இதன் நிறைவு விழா இன்று (27ம் தேதி) மாலை நடைபெறவுள்ளது. அப்போது பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு கல்லூரி முதல்வர் கோவிந்தன் சான்றிதழ் வழங்க உள்ளார்.

## விளைச்சல் அதிகரிப்பால் இஞ்சி விலை குறைந்தது பீ80க்கு விற்பனை

சேலம்: தமிழகம், வடமாநிலங்களில் இஞ்சி விளைச்சல் அதிகரிப்பால் படிப்படியாக விலை குறைந்து வருகிறது. நேற்று நிலவரப்படி ஒரு கிலோ இஞ்சி ரூ.80 என விற்பனை செய்யப்பட்டது.

தமிழகத்தில் ஊட்டி, கொடைக்கானல், ஓசூர் பகுதிகளிலும், பெங்களூர் மற்றும் வடமாநிலங்களிலும் அதிகளவில் இஞ்சி சாகுபடி செய்யப்படுகிறது. கடந்தாண்டு பருவமழை ஏமாற்றியதால் இஞ்சி சாகுபடி பரப்பளவு பரவலாக குறைந்துள்ளது. இதனால் கடந்த மே, ஜூன், ஜூலை மாதத்தில் மார்க்கெட்டுக்கு 100 முதல் 150 மூட்டை தான் விற்பனைக்கு வந்தது. இஞ்சி வரத்து குறைந்ததால், அதன் விலை கிடுகிடுவென உயர்ந்து கிலோ ரூ.200 வரை விற்கப்பட்டது.

தற்போது தமிழகம் மற்றும் வட மாநிலங்களில் பெய்த மழையால் இஞ்சி ஓரளவிற்கு நல்ல விளைச்சலை தந்துள்ளது. இதனால் மார்க்கெட்டுக்கு வழக்கத்தைவிட கூடுதலாக இஞ்சி வந்து கொண்டிருக்கிறது. இதனால் இஞ்சி விலை படிப்படியாக குறைந்து வருகிறது.

இது குறித்து செவ்வாய்பேட்டை பால்மார்க்கெட் இஞ்சி வியாபாரிகள் கூறியதாவது: சேலம் செவ்வாய்பேட்டை பால் மார்க்கெட், கடைவீதி, திருமணிமுத்தாறு ஓரமுள்ள கடைகளுக்கு தினசரி ஆயிரக்கணக்கான இஞ்சி மூட்டைகள் விற்பனைக்கு வரும். இங்கு வரும் இஞ்சியை மேட்டூர், ஆத்தூர் மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதியை சேர்ந்த சில்லரை வியாபாரிகள் விற்பனைக்கு வாங்கிச்செல்வார்கள்.

கடந்த ஏப்ரல், மே, ஜூன் மாதத்தில் தமிழகம் மற்றும் வட மாநிலங்களில் இஞ்சி விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது. அப்போது மார்க்கெட்டுக்கு இஞ்சி வரத்து குறைந்தது. கடந்த ஏப் 1ம் தேதி ரூ.55க்கு விற்ற இஞ்சி படிப்படியாக உயர்ந்து, மே, ஜூன், ஜூலையில் தற்போது ரூ.170 முதல் ரூ.200 வரை விற்றது. தற்போது இஞ்சி விளைச்சல் அதிகரிப்பால், 800 மூட்டைக்கு மேல் விற்பனைக்கு வருகிறது. இதனால் விலை படிப்படியாக குறைந்து, கடந்த 1ம் தேதி ரூ.75 என விற்றது. தற்போது ஒரு கிலோ இஞ்சி ரூ.80 என விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு இஞ்சி வியாபாரிகள் கூறினர்.

### தேவாரம் பகுதியில் விளைந்து சென்ட் தயாரிக்க பயன்படும் மரிக்கொழுந்து

தேவாரம்: தேவாரம் பகுதியில் விளையும் மரிக்கொழுந்து சென்ட் தயாரிப்பில் முக்கிய பங்காற்றி வருகிறது.

தேவாரம் பகுதி இயற்கையிலேயே மிக வறண்ட பகுதியாக உள்ளது. ஒவ்வொரு வருடமும் பெய்கின்ற தென்மேற்கு பருவமழை, வடகிழக்கு பருவமழை, கோடைமழையின் மூலம் இங்குள்ள 40க்கும் மேற்பட்ட கண்மாய்களுக்கு தண்ணீர் வரத்து இருந்தால் மட்டுமே காய்கறி உள்ளிட்ட பயிர்கள் விவசாயம் செய்ய முடியும். மழை பெய்யாதபோது விவசாயிகள் பெரும் சிக்கல் அடைகின்றனர்.

குறைந்த அளவு தண்ணீர் தோட்டக்கிணற்றில் இருக்கும்போது பல்வேறு விவசாயங்களை நம்பிக்கையுடன் செய்கின்றனர். இதில் தே.சிந்தலைசேரி, தே.அழகர்நாயக்கன்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி உள்ளிட்ட ஊர்களில் மரிக்கொழுந்து பயிர் செய்யப்படுகிறது. இங்கு விளையும் மரிக்கொழுந்து அதிகளவில் மதுரை உள்ளிட்ட தென்மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது. மரிக்கொழுந்து விளைந்தவுடன் பறிக்கப்பட்டு அதனை உலர்த்திய பின்பு 1 கிலோ ரூ.30 முதல் 50 வரை விற்பனை செய்யப்படுகிறது.

மரிக்கொழுந்து பூக்களை கொள்முதல் செய்ய மதுரை மொத்த வியாபாரிகள் இப்பகுதிகளுக்கு அதிகமாக வருகின்றனர். பறிக்கப்பட்ட இடங்களில் எடைபோடப்பட்டு உடனடியாக பணம் தரப்படுகிறது. இதனால் மரிக்கொழுந்து விவசாயிகள் மிக ஆர்வமுடன் விதைப்பில் ஈடுபடுகின்றனர். இதுகுறித்து விவசாயி சங்கர் கூறுகையில், ‘மரிக்கொழுந்து பூக்கள் உள்ளூர் தேவைகளில் சாமிபடங்களுக்கு மாலையாக போடுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

ஆனால் இதனை பறித்து உரிய பக்குவப்படுத்தி உலர்த்திய பின்பு மதுரை உள்ளிட்ட மாவட்டங்களுக்கு அனுப்பினால் அதனை மொத்த வியாபரிகள் ஆர்வமுடன் கொள்முதல் செய்கின்றனர். நேரடியாகவும் இதனை வாங்கிச் செல்கின்றனர். மரிக்கொழுந்து பூக்கள் சென்ட் தயாரிப்பில் அதிகமாக பயன்படுத்தப்படுவதால் விவசாய நிலங்களில் விளைந்து விட்டாலே இதனை வாங்குவதற்கு மொத்த வியாபாரிகள் வருகின்றனர். தேவாரம் பகுதியில் அதிகமான அளவில் இவ்விவசாயம் நடக்கிறது’, என்றார்.

## நெல் விதைக்கும் கருவி இருக்கா? 40 சதவீதம் விதை மிச்சம் ஆகும்

திருச்சுழி: நேரடி நெல் விதைக்கும் கருவியை கொண்டு விதைப்பதன் மூலம் 40 சதவீதம் விதை களை மிச்சப்படுத்தி அதிக மகசூல் பெறலாம் என வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விவசாயிகள் நெல் சாகுபடி செய்ய டிராக்டர், நாட்டு கலப்பை கொண்டு விதைப்புகளை மேற் கொண்டு வருகின்றனர். விதைப்புப் பணிகளுக்கு கூலித் தொழிலாளர்கள், கால்நடைகளையே அதிகம் நம்ப வேண்டி நிலை உள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் காலம் தாழ்த்தி பயிர் செய்வதால் மகசூல் குறைவதோடு, அதிகளவில் விதைகளும் தேவைப்படுகிறது. மேலும் நெருக்கடி யாக நீர், உரம் மற்றும் சூரிய ஒளி முழுமையாக கிடைக்காத நிலை உருவாகிறது.

இந்த பிரச்னைகளை நிவர்த்தி செய்ய வேளாண் அதிகாரிகள் வழங்கியுள்ள ஆலோசனைகள்:

விதைப்பு கருவியின் மூலம் குறைந்த செலவில் ஒரு ஏக்கர் நிலத்தை 45 நிமிடங்களில் விதைப்பு செய்யலாம். இதனால், ஏக்கருக்கு ரூ.500 வரை மிச்சமாகும். தவிர இதன் மூலம் பயிர் செய்யும் போது 40 சதவீத விதை களை மிச்சப்படுத்த முடி யும். பயிர்களுக்கிடையே

சரியான இடைவெளி பராமரிக்கப்படுவதால் சீரான விகிதத்தில் சத்துக்கள் கிடைக்கும். நேரடி நெல் விதைப்பில் விதைத்த 3 முதல் 8 நாட்களுக்குள் ஏக்கருக்கு பிரிட்டிலாகுளோர் 175 கிராம் அல்லது பென்டிமெத்தலின் 400 கிராம் வீதம் 25 கிலோவை மணலுடன் கலந்து வயலில் போதுமான ஈரப்பதம் இருக்கும்போது தெளிக்க வேண்டும். விதைத்த 25வது நாளில் களையை கட்டுப்படுத்த 2,4 டிஇஇ சோடியம் உப்பை ஏக்கருக்கு 200 கிராம் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவேண்டும். பயிர் வளர்ந்த 15 முதல் 20வது நாளில் ஏக்கருக்கு பிஸ்பைரிபேக் சோடியம் 10 கிராம் அல்லது அசிம்சல்பியூரான் 15 கிராம் என ஏதா வது ஒரு களைக்கொல்லி யை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைதெளிப்பானை கொண்டு சீராக தெளிக்க வேண்டும். இதன் மூலம் இலைக் களைகள் மற்றும் கோரை, புல் வகைகளை கட்டுப்படுத்தலாம். இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

## இம்சை தரும் இலை பேன் பருத்தி செடியை பாதுகாக்க வேளாண் துறை ‘அட்வைஸ்’

திருச்சுழி: பருத்தியை தாக்கி பாழ்படுத்தும் பூச்சிகளை கட்டுப்படுத்த வேளாண் துறையினர் ஆலோசனைகள் வழங்கியுள்ளனர்.

திருச்சுழி, காரியாபட்டி, அருப்புக்கோட்டை வட்டாரங்களில் அதிகளவில் விவசாயிகள் பருத்தி சாகுபடி செய்துள்ளனர். தற்போது பருத்தி சாகுபடி செய்யப்பட்டு 20 முதல் 25 நாள் பயிர்களாக வளர்ந்துள்ளன. இப்பருவத்தில் சாறு உறிஞ்சும் பூச்சிகளான தத்துப்பூச்சி, இலை பேன், அசுவினி மற்றும் வெள்ளை ஈயின் தாக்குதல் வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன. இந்தப் பூச்சிகளின் தாக்குதலினால் செடிகள் மஞ்சள் நிறமடைந்து பயிர் வளர்ச்சி குன்றிக் காணப்படும். தாக்குதல் அதிகமிருந்தால் செடிகள் வாடி கருகி விடும்.

இதுகுறித்து கோவிலாங்குளம் வேளாண்மை அறிவியல் நிலைய பயிர் பாதுகாப்பு துறை தொழில்நுட்ப வல்லுநர் ராஜேந்திரன் பயிர் பாதுகாப்பு உத்திகளை கடைப்பிடித்து பூச்சிகளைக் கட்டுப்படுத்துவ குறித்து விவசாயிகளுக்கு தெரிவித்துள்ள ஆலோசனைகள்: பருத்தி விதைகளை ஊடுருவி பாயும் பூச்சிக்கொல்லியான இமிடாகுளோபிரிட் மருந்தை 1 கிலோ விதைக்கு 5 மிலி என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவேண்டும். பயிர் முளைத்த 20 முதல் 25 நாளில் இமிடாகுளோபிரிட் மருந்து ஏக்கருக்கு 40 மிலி என்ற அளவிலும் அல்லது ரோகார் மருந்து ஏக்கருக்கு 300 மிலி என்ற அளவிலும் பயிரில்

தெளிக்க வேண்டும். குருணை மருந்துகளான பியூரடான் அல்லது போரேட் மருந்துகளை ஏக்கருக்கு 5 கிலோ என்ற அளவில் 3 பங்கு மணலுடன் கலந்து மண்ணில் இடவேண்டும். தாவர பூச்சிக் கொல்லிகளான வேப்ப எண்ணெய் 3 சதம் அல்லது வேப்பங்கொட்டை சாறு 5 சதம் என்ற அளவிலும் பயிரில் தெளிக்க வேண்டும். ஊடு பயிராக தட்டைப் பயறு, சூரியகாந்தி மற்றும் மக்காச்சோளம் பயிரிட்டால் நன்மை செய்யும் பூச்சியான பொறி வண்டின் எண்ணிக்கை பெருகி அசுவினி, தத்துப்பூச்சி மற்றும் இலைப்பேனின் தாக்குதலைக் குறைக்கிறது. மஞ்சள் வண்ண ஒட்டும் பொறி ஏக்கருக்கு 10 என்ற அளவில் வைத்து வெள்ளை ஈயின் தாக்குதலைக் குறைக்க வேண்டும். இவ்வாறு கூறியுள்ளார்.

## கருத்து கேட்பு கூட்டம் பொதுமக்கள் வெளிநடப்பு

நெல்லிக்குப்பம்: நெல்லிக்குப்பம் இ.ஐ.டி பாரி சர்க்கரை ஆலையில் கரும்பு அரவையை நாள் ஒன்றுக்கு 5 ஆயிரம் டன்னில் இருந்து ஏழாயிரத்து ஐநூறு டன் அரவை செய்யவும், மின் உற்பத்தியை 23 மெகாவாட்டிலிருந்து 42 மெகாவாட் மின் உற்பத்தி விரிவாககம் செய்ய முடிவு செய்து மத்திய அரசிடம் அனுமதி கோரியுள்ளனர்.

இது தொடர்பாக தமிழ் நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் நெல்லிக்குப்பத்தில் மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடந்தது. மாவட்ட ஆட்சியர் கிர்லோஷ்குமார் தலைமை தாங்கினார். மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ராஜா, இ.ஐ.டி பாரி சர்க்கரை ஆலை துணை தலைவர் ராஜசேகர், கரும்பு பிரிவு பொது மேலாளர் பாலாஜி, அரவை பொது மேலாளர் கருணாகரன், சேர்மன் சுதாகர் மற்றும் முக்கிய விவசாயிகள், ஆலையை சுற்றியுள்ள குடியிருப்பாளர்கள், பல்வேறு கட்சி பிரமுகர்கள் கலந்து கொண்டனர். ஆலை துவங்கப்பட்டு இருநூறு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆனால் இதுவரை ஆலையை சுற்றியுள்ள மக்களுக்கு எவ்வித அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை. இரவு நேரங்களில் ஆலைகழிவு நீரின் துர்நாற்றம் மூச்சு கூட விட முடியாத அளவிற்கு வரும். ஆலை கழிவு நீரால் குடிநீர் பாதிக்கப்படுகிறது. நெல்லிக்குப்பம் பகுதி மக்களுக்கு முதலில் வேலை வாய்ப்பு கொடுக்கவேண்டும் உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகள் மற்றும் பல கோரிக்கைகள் பற்றி பல்வேறு கட்சி பிரமுகர்கள், நகராட்சி சேர்மன், கவுன்சிலர்கள், ஆலை சுற்றியுள்ள குடியிருப்பாளர்கள், சமூக ஆர்வலர்கள் கூறினர்.

பின்னர் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தை கண்டித்து வழக்கறிஞர் ராம்சிங், விடுதலை சிறுத்தைகள் ஆரோக்கியராஜ், குருமூர்த்தி, உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்டவர்கள் கோரிக்கை முழக்கங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்து வெளிநடப்பு செய் தனர். ஆட்சியர் பேசுகை யில், மக்களின் கருத்துகளை கேட்டு மத்திய அரசுக்கு அனுப்ப உள்ளோம். அதை பரிசீலனை செய்து மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் தான் ஆலை விரிவாக்கம் பற்றி முடிவு செய்யும், என்றார்.

## கடலூர் மாவட்டத்தில் விவசாயிகள் காத்திருப்பு போராட்டம்

கடலூர்: கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் கடலூர் மாவட்டத்தில் காத்திருப்பு போராட்டம் நடந்தது.

ஏழை, எளிய மக்களுக்கு குடிமனை பட்டா வழங்க வேண்டும். கோயில், மடம், அறக்கட்டளை, வக்புபோர்டுக்கு சொந்தமான நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு ஒரு தொகையை அரசு தீர்மானித்து தவணை முறையில் பெற்று கொண்டு குடியிருப்பவர்களுக்கு மனையை சொந்தமாக்கிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தி கடலூரில் நடந்த போராட்டத்துக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கடலூர் மாவட்ட துணை தலைவர் துரைராஜ் தலைமை தாங்கினார். மாவட்ட பொருளாளர் தட்சணாமூர்த்தி முன்னிலை வகித்தார்.

சிதம்பரம்: சிதம்பரம் சப்கலெக்டர் அலுவலகம் அருகே நடந்த போராட்டத்துக்கு சட்டமன்ற உறுப்பினர் பாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். இந்நிலையில் கடந்த ஆண்டு கொடுத்த மனுவிற்கு பட்டா வழங்க கோரி எம்எல்ஏ தலைமையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். சப்கலெக்டர் அவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினார். காட்டுமன்னார்கோவில்: காட்டுமன்னார்கோவிலில் மார்க்சிஸ்ட் கட்சி வட்ட தலைவர் பிரகாஷ் தலைமை தாங்கினார். விவசாய சங்க வட்ட தலைவர் மகாலிங்கம், செயலாளர் புகழேந்தி, தேவேந்திரன் முன்னிலை வகித்தனர். போராட்டக்காரர்கள் வட்டாட்சியர் அலுவலக நுழைவு வாயிலில் அமர்ந்து போராட்டம் செய்தனர். தலைமை யிடத்து துணை தாசில்தார் எழிலன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

விருத்தாசலம்: விருத்தாசலத்தில் சின்னப்பராஜ் தலைமை தாங்கினார். தொழிலாளர் சங்க வட்ட தலைவர் நாகராஜன் முன்னிலை வகித்தார். மாவட்ட செயலாளர்கள் ரவிச்சந்திரன், தண்டபாணி, மாவட்டக்குழு கந்தசாமி, அசோகன், வட்ட செயலாளர் கோகுலகிரீஸ்டீபன்

உட்பட பலர் கலந்துகொண்டனர். தொழிலாளர்கள் சங்கத்தினர் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் வட்டாட்சியர் அலுவலகத்தின் உள்ளே செல்லும் வழியில் அமர்ந்து காத்திருக்கும் போராட்டம் நடத்தினார்கள்.

அங்கு வந்த போலீசார் அவர்களை அப்புறப்படுத்த முயன்றனர். இதனால் தொழிற்சங்க பிரமுகர்களுக்கும், போலீசாருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. வட்டாட்சியர் வந்து மனுக்களை பெற்றுக்கொண்டால் மட்டுமே கலைந்து செல்வோம் என தொழிலாளர்கள் கூறினர். கோட்டாட்சியர் வந்து மனுக்களை பெற்றுக்கொள்வார் என போலீசார் அவர்களை சமாதானப் படுத்தினார்கள். பின்னர் கோட்டாட்சியர் உதய குமாரிடம் பொது மக்கள் மனுக்களை கொடுத்து கலைந்து சென்றனர்.

## ராசிபுரம் அருகே விவசாயிகளுக்கு விதை கிராம திட்ட பயிற்சி

ராசிபுரம்,: ராசிபுரம் அருகே வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கான விதை கிராம திட்ட பயிற்சி முகாம் நடைபெற்றது.

ராசிபுரம் அருகே உள்ள கூனவேலம்பட்டிபுதூர் கிராமத்தில் வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கான விதை கிராமத்திட்ட பயிற்சி முகாம் நடந்தது. நிகழ்ச்சிக்கு வேளாண்மை துறை உதவி இயக்குனர் வரதராஜூ தலைமை வகித்தார். விதை சான்று அலுவலர் கௌதமன் கலந்து கொண்டு விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள், விதை சான்று நடைமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கி கூறினார்.

மேலும் வேளாண் அலுவலர் ஜெயமாலா பங்கேற்று நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பம், மான்ய திட்டங்கள் குறித்து விளக்கி பேசினார். தோட்டக்கலை துறை திட்டங்கள் குறித்து தோட்டக்கலை துறை அலுவலர் சுப்பிரமணியம் விளக்கி கூறினார். முகாமில் பங்கேற்ற விவசாயிகளுக்கு இடு பொருட்கள் வழங்கப்பட்டன.

## பயிர்களுக்கு வளர்ச்சியூக்கியாக பயன்படும் பனம்பழம் கரைசல் வேளாண் தொழில்நுட்ப வல்லுநர் தகவல்

ராமநாதபுரம்: பயிர் வளர்ச்சிக்கு பனம்பழம் கரைசலை பயன்படுத்த லாம் என வேளாண் தொழில்நுட்ப வல்லுநர் ஏகாம்பரம் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் ராமநாதபுரம், மண்டபம், சாயல் குடி, கமுதி, கடலாடி, திருப்புல்லாணி, திருவாடானை உள்ளிட்ட பகுதிகளில் பனைமரங்கள் ஏராளமாக உள்ளன. வறட்சியை தாங்கி வளரும் இம்மரங்கள் முன்பு வீடு கட்ட பயன்படுத்தப்பட்டன. பனை சட்டம்,

ஓலை, மட்டை ஆகியவை அனைத்தும் மக்கள் பயன்பாட்டிற்கு உகந்ததாகும். மட்டையிலிருந்து கயிறு, தும்பு தயாரிக்கலாம். பனையிலிருந்து பதனீர் எடுத்து கருப்பட்டி தயாரிக்கப்பயன்படுகிறது. பலவித பயன்தரும் பனைமரங்கள் தற்போது அழிக்கப்பட்டு வருகின்றன.

பயிர் வளரவும், விளைச்சல் அதிகரிக்கவும் உரம் வாங்க விவசாயிகள் அதிகளவு செலவு செய்ய வேண்டி உள்ளது. இந்நிலையில் பனம்பழம் கரைசல் தயாரித்து உரங்களுக்கு பதிலாக பயன்படுத்தலாம் என ஆலோ சனை வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண் தொழில்நுட்ப வல்லுநர் ஏகாம்பரம் கூறுகையில், Ôபயிர்கள் வளர்வதற்கு சிறந்த வளர்ச்சியூக்கியாக பனம்பழம் கரைசல் பயன்படுகிறது. இந்த கரைசலை பயன்படுத்துவதன் மூலம் நிலத்தில் மண் வளம் பெருகும், மண்ணில் உள்ள நுண்ணுயிரிகள் அதிகரிக்கும், பயிருக்கு நல்ல வளர்ச்சி ஊக்கியாக செயல் படும். இதனால் பயிர் நன்றாக வளர்ந்து மகசூல் அதிகரிக்கும். பழக்கரைசல் தெளிப்பதன் மூலம் பூச்சி தாக்குதலும் குறையும்.

ஒரு ஏக்கருக்கு 10 கிலோ பனம்பழம், 5 கிலோ பசுமாடு சாணம். இதனுடன் 20 லிட்டர் தண்ணீர் கலந்து ஒருவாரம் வரை வைத்திருக்க வேண்டும். இந்த கரைசலை தினமும் லேசாக கலக்கிவிட்டு வரவேண்டும். ஒரு வாரத்திற்கு பின்னர் கரைசலில் ஒரு லிட்டர் எடுத்து இதனுடன் 10 லிட்டர் தண்ணீர் கலக்க வேண்டும். இதனை நெல், சிறுதானிய பயிர்கள், காய்கறி செடிகள், பூச்செடிகள், பழவகை செடிகள் மீது தெளிக்கலாம். இதனால் பயிர் மற்றும் செடிகளில் வளர்ச்சி அதிகரிக்கும். இந்த கரைசலை தண்ணீர் பாய்ச்சும்போது வேர் வழியாக செல்லும் வகையில் தண்ணீருடன் கலந்துவிடலாம். இதனால் மண்புழு அதிகம் உற்பத்தியாகும். பயிர்களுக்கு நேரடியாக காற்று மூலம் கிடைக்ககூடிய தளை சத்துகள் கிடைக்கும்.

மண்ணில் உள்ள மணிசத்து நேரடியாக பயிருக்கு கிடைக்கும். காய்கறிகள் திரட்சியாகவும், பசுமையாகவும் இருக்கும். மண் இருக்கம் குறைவு ஏற்படுவதன் மூலம் வேர்கள் மிருதுவாக செல்லும் வாய்ப்பு ஏற்படும். இதில் செலவும் குறைவு. இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி விவசாயிகள் பயன்பெறலாம்Õ என்றார்.

## கரும்பு ஆலை விவசாயிகளுக்கு 5ம்தேதிக்குள் நிலுவை தொகை

திருக்கனூர்: திருக்கனூர் அருகே உள்ள லிங்காரெட்டிபாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அனுப்பிய கரும்புக்கு பணம் வழங்காதது மற்றும் வங்கிகளில் பெற்ற கடன் தொகை மற்றும் வட்டியை ஆலை நிர்வாகம் பிடித்தம் செய்து செலுத்தாததை கண்டித்து விவசாயிகள் பல்வேறு போராட்டங்கள் நடத்தி வருகின்ற னர்.

சம்பவத்தன்று காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை முற்றுகை, ஆலை மூடல், மறியல் என அடுத்தடுத்து போராட்டங்களில் ஈடுபட்டனர். துணை சபாநாயகர் செல்வம், ஆலை சேர்மன் கிருஷ்ணசாமி ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர். 5ம் தேதியிட்ட காசோலை வழங்குகிறோம். 2 நாளில் முதல்வரிடம் பேசி கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என உறுதியளித்ததன் பேரில், போராட்டங்கள் கைவிடப்பட்டன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை சங்க பிரதிநிதிகள் செந்தில்குமார், பரமசிவம், ஊமைத் துரை, ரங்கபாஷ்யம், தட்சிணாமூர்த்தி மற்றும் 100க்கும் மேற்பட்ட விவசாயிகளுடன் துணை சபாநாயகர் செல்வம், ஆலை சேர்மன் கிருஷ்ணசாமி, மேலாண் இயக்குனர் ராஜசேகரன், முன்னாள் எம்எல்ஏ அருள்முருகன் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பிடித்தம் செய்யப்பட்ட வங்கி கடன், வட்டி தொகையை உடனே செலுத்த வேண்டும். காலதாமதம் காரணமாக உயர்ந்துள்ள வட்டியையும் சேர்த்து கட்ட வேண்டும். ரூ.6 கோடி நிலுவை தொகையையும் வழங்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

இதையேற்ற துணை சபாநாயகர், நிலுவை தொகை 5ம் தேதிக்குள் வழங்கப்படும். வங்கி கடன் மற்றும் வட்டி தொகையை 15ம் தேதிக்குள் செலுத்தப்படும். எனவே விவசாயிகள் ஆலைக்கு தொடர்ந்து கரும்பை அனுப்ப வேண்டும், என்றார். இதற்கு பதிலளித்த விவசாய சங்க பிரதிநிதிகள், 15ம் தேதிக்குள் தொகையை செலுத்தி விட்டால் அனைத்து விவசாயிகளையும் கூட்டி முடிவை அறிவிப்பதாக கூறி கலைந்து சென்றனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## தாராபுரம் பகுதிகளில் சின்ன வெங்காய பூக்களில் இருந்து விதை சேகரிப்பு பணி தீவிரம்



தாராபுரம்,

தாராபுரம் பகுதியில் சின்ன வெங்காய பூக்களில் இருந்து விதை சேகரிப்பு பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

<u>சின்ன வெங்காயம்</u>

சின்ன வெங்காயம் மற்றும் பெரிய வெங்காயத்தின் விலை விண்ணை தொடும் அளவுக்கு சென்று கொண்டிருப்பதால் விவசாயிகள் வெங்காய சாகுபடிக்கு மாறி உள்ளனர். இதனால் வெங்காய விதைக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே அதிக பரப்பளவில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யும் விவசாயிகள் வெங்காயம் விளைந்ததும் ஒரு குறிப்பிட்ட பரப்பளவு வெங்காய செடிகளை மட்டும் விட்டு விட்டு மற்றவற்றை அறுவடை செய்கிறார்கள். அறுவடை செய்தது போக மீதமுள்ள வெங்காய செடிகளில் இருந்து வெள்ளை நிற பூக்கள் கொத்தாக மலர்கின்றன. இந்த மலரில்தான் மிளகு போன்று கருப்பு நிறத்தில் வெங்காய விதைகள் உற்பத்தியாகிறது.

<u>விதைகள் சேகரிக்கும் பணி</u>

பின்னர் இந்த பூக்களை பறித்து அவற்றை வெயிலில் காயவைத்தால் பூக்களில் உள்ள கருப்புநிற விதைகள் வெளியே வந்து விடும். பின்னர் அவற்றை சேகரித்து விற்பனை செய்யலாம். தற்போது ஒரு கிலோ சின்ன வெங்காயத்தின் விதை விலை ரூ.1000–க்கு

மேல் விற்கப்படுவதால் விதை சாகுபடியில் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகள் ஈடுபடுகிறார்கள். தாராபுரம் தில்லாபுரி அம்மன் கோவில் அருகே சின்னவெங்காய பூக்கள் அதிக பரப்பளவில் உள்ளன. அவற்றை பறிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## தாராபுரம் வாய்க்கால் பாசன பகுதிகளில் நெல் இன்று விடும் பணி தொடங்கியது



தாராபுரம்,

தாராபுரம் வாய்க்கால் பாசன பகுதிகளில் நெல்இன்று விடும் பணி தொடங்கியது.

<u>தாராபுரம் வாய்க்கால்</u>

திருப்பூர் மாவட்டம் அமராவதி அணையில் போதிய நீர்மட்டம் இருப்பதால் விவசாயத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அமராவதி பழைய ஆயக்கட்டு பாசனம் மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன பகுதிகளுக்கு கடந்த 13–ந் தேதி அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. இதையடுத்து தங்களது பகுதிகளுக்கு தண்ணீர் வந்து சேர்ந்ததை தொடர்ந்து விவசாயிகள் விவசாய பணிகளை தொடங்கி உள்ளனர். தாராபுரம் வாய்க்கால் மூலம் மொத்தம் 2 ஆயிரத்து 417 ஏக்கர் நிலங்கள் பாசன வசதியை பெற்றுள்ளன. இவற்றில் கரும்பு மற்றும் வாழை போன்றவை சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

<u>நெல்இன்று விடும் பணி</u>

மீதமுள்ள நிலங்களில் நெல்நடவு பணி தொடங்க முதற்கட்டமாக நெல்நாற்று விடும் பணி தொடங்கப்பட்டுள்ளது. வாய்க்கால் தண்ணீர் வயலை சென்றடைந்ததும் வரப்புகளை செம்மை படுத்தி, நிலத்தை உழவு செய்து அதில் நெல்நாற்று விட்டு வருகிறார்கள்.

தற்போது ஏ.டி.டி. மற்றும் ஐ.ஆர்.20 ரக நெல்விதைகளை விதைத்துள்ளனர். இந்த நெல் முளைத்து 15 நாள் முதல் 20 நாள் நாற்றாகவும் அவற்றை பிடுங்கி நடவு செய்ய வேண்டும். மேலும் திருந்திய நெல் சாகுபடி செய்தால் கூடுதல் மகசூல் கிடைக்கும் என்றும், எனவே விவசாயிகள் திருந்தியநெல் சாகுபடியை மேற்கொள்ள வேண்டும் என வேளாண்துறை அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## உடுமலை அருகே வேளாண்மை மாணவிகளுக்கு இயற்கை விவசாய பயிற்சி



உடுமலை,

கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமான வானவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த இறுதி ஆண்டு இளங்கலை வேளாண்மை மாணவிகளுக்கு வேளாண்மை மற்றும் இயற்கை உரம் தயாரிப்பு குறித்த பயிற்சி முகாம் கடந்த 15 நாட்கள் உடுமலையை அடுத்த மொடக்குப்பட்டி கிராமத்தில் நடைபெற்றது.

இதில் மாணவிகள் திவ்யபாரதி, இந்துமதி, ஜெனுஷியா, கவிதா, கிருத்திகா, கிருஷ்ணகுமாரி, லிபி அந்தோனி ஆகியோர் மண்புழு, கம்போஸ்ட், பஞ்சகாவ்யா, உயிர் உரம் ஆகிய இயற்கை விவசாயம் குறித்த நடைமுறை பயன்பாடுகள் பற்றி அறிந்து கொண்டனர். பயிற்சியில் உடுமலை தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் இளங்கோவன் கலந்து கொண்டு கொண்டு இயற்கை உரத்தின் பயன்பாடு குறித்து மாணவிகளுக்கு விளக்கி பேசினார். பயிற்சியின் முடிவில் மாணவிகள் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப் பட்டது.

## நடப்பு ஆண்டில் 1 லட்சம் எக்டேரில் சம்பா சாகுபடி செய்ய இலக்கு கலெக்டர் நடராசன் தகவல்

திருவாரூர்,

நடப்பு ஆண்டில் 1 லட்சம் எக்டேரில் சம்பா சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதாக கலெக்டர் நடராசன் கூறினார்.

**விவசாய பணிகள் ஆய்வு**

திருவாரூர் மாவட்டப் பகுதி களில் முதல்-அமைச்சரின் வேளாண்மை துறை மானிய தொகுப்பின் மூலம் நடை பெற்று வரும் விவசாய பணி களை கலெக்டர் நடராசன் பார்வையிட்டு ஆய்வு செய் தார். திருவாரூர், கோட்டூர், திருத்துறைப்பூண்டி, நீடாமங்கலம், மன்னார்குடி உள்ளிட்ட வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த கிராமப் பகுதிகளுக்கு நேரடி யாகச் சென்ற கலெக்டர் அங்கு நடைபெற்று வரும் சம்பா சாகுபடி, குறுவை அறுவடைப் பணிகள் குறித்து விவசாயிகளிடம் விவரங்கள் கேட்டறிந்தார். நேரடி நெல் விதைப்பு முறை, உர மேலாண்மை பணிகள், தண்ணீர் இருப்பு, விதை இருப்பு போன்ற விவரங்கள் குறித்தும் கலெக்டர் நேரடியாக கள ஆய்வு செய்தார்.

**நவீன முறையில் விவசாய பணி**

திருவாரூர் அருகே உள்ள திருக்காரவாசல், கோட்டூர் அருகே உள்ள பெரியகுடி உள்ளிட்ட இடங்களில் பயிர் செய்யப்பட்டுள்ள சி.ஆர்.1009 ரக பயிர்களையும், நீடாமங் கலத்தில் குறுவை அறுவடை பணிகள் நவீன எந்திரங்களை கொண்டு நடைபெறுவதையும் கலெக்டர் பார்வையிட்டார். ஆய்விற்குப் பின்னர் கலெக் டர் நடராசன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அந்த பேட்டியில் அவர் கூறிய தாவது:-

**குறுவை சாகுபடி**

நடப்பு ஆண்டில் 18 ஆயிரத்து 394 எக்டேரில் குறுவை சாகுபடி நடை பெற்றது. இதில் திருந்திய நெல் சாகுபடி முறை யில் 12 ஆயிரத்து 176 எக்டேரிலும், நேரடி விதைப்பு முறை மூலம் 274 எக்டேரிலும், நடவு முறையில் 5 ஆயிரத்து 944 எக்டேரிலும் சாகுபடி நடைபெற்றது.

**1 லட்சம் எக்டேர் பரப்பு**

நடப்பு ஆண்டில் 1 லட்சத்து 30 ஆயிரத்து 502 எக்டேர் பரப்பில் சம்பா சாகுபடி செய்ய திட்டமிடப்பட் டுள் ளது. இதில் 70 ஆயிரத்து 412 எக்டேர் பரப்பில் நேரடி விதைப்பு முறையில் சாகுபடி நடைபெற்றுள்ளது. சான்று பெற்ற விதைகள் வேளாண்மைத்துறை மூலமாக 710 மெட்ரிக் டன், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி கள் மூலமாக 350

மெட்ரிக் டன், தனியார் விதை விற்பனை நிலையங்கள் வாயிலாக 2 ஆயிரத்து 515 மெட்ரிக் டன் விதை வினியோகம் நடை பெற்றுள்ளது.

**3 ஆயிரம் டன் வினியோகம்**

சம்பா சாகுபடிக்கு என்று நெல் விதை 3 ஆயிரத்து 575 மெட்ரிக் டன் விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், வேளாண்மைத்துறை, தனியார் விதை விற்பனை நிலையங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி கள் ஆகியவற்றில் 120 மெட்ரிக் டன் விதை நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தண்ணீர் இருப்பு, உர தேவை ஆகி யவை குறித்து ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு கலெக்டர் நடராசன் கூறினார். முன்னதாக விவசாய பணி களை பார்வையிட்ட கலெக்டர் நடராசனிடம் விவசாயிகள் கூறியதாவது:-

**கூடுதல் மகசூல்**

மானிய விலையில் விதை நெல் வினியோகம், களைக் கொல்லி மருந்து வினியோகம் போன்ற பல்வேறு நலத்திட் டங்களை விவசாயிகளுக்காக முதல்-அமைச்சர் செயல் படுத்தி வருகிறார். குறுவை சிறப்பு திட்ட தொகுப்பு திட்டத்தில் ஜிப்சம், நுண்ணூட்ட உரம், உயிர் உரம், தண்ணீர் கொண்டு செல்லும் குழாய்கள் ஆகிய வற்றை விலையில்லாமல் பெற்றதன் அடிப்படையில் இந்த ஆண்டு கூடுதல் மகசூல் கிடைக்கும் என்று நம்புகிறோம். ஆய்வின்போது வேளாண்மை இணை இயக்குனர் கணேசன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் மயில்வாகனன் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

### கடலூர், முதல்–அமைச்சர் அவர்களுக்கு கடலூர் விவசாயிகள் பாராட்டு

ஊக்கத் தொகையுடன் கூடிய நெல்கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க உத்தரவிட்டுள்ள முதல்–அமைச்சர் ஜெயலலிதாவுக்கு கடலூர் மாவட்ட விவசாயிகள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

குறைகேட்பு கூட்டம்

கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் கலெக்டர் கிர்லோஷ்குமார் தலைமையில் நேற்று காலை நடைபெற்றது. இதில் மாவட்ட வருவாய் அதிகாரி மனோகரன், கலெக்டரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) அசோகன், முன்னோடி வங்கி மேலாளர் ஜெயராமன் மற்றும் வேளாண்மை, வருவாய், கூட்டுறவு மற்றும் பொதுப்பணித்துறை உள்ளிட்ட பல்வேறு

துறைகளை சேர்ந்த அதிகாரிகள், விவசாயிகள் கலந்துகொண்டனர். கூட்ட விவரம் வருமாறு:–

<u>கடன் தர மறுப்பு</u>

குஞ்சிதபாதம்:– சிதம்பரம் அருகே உள்ள கந்தகுமரன், ரதாமதகு வாய்க்கால்களில் பிளாஸ்டிக் மற்றும் குப்பைகளிவுகள் நிரம்பி அடைப்பு ஏற்பட்டுள்ளதால் தண்ணீர் வரத்து இன்றி சம்பா நெல் சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே 2 வாய்க்கால்களிலும் நீர்வரத்து தடையின்றி செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கருவேப்பிலங்குறிச்சியில் உள்ள தேசிய வங்கி ஒன்றில் கறவை மாட்டுக்கு கடன் தர மறுக்கின்றனர். கடன் இல்லா சான்று தந்தால் வேறு வங்கிகளிலாவது கடன் பெறலாம் என்றால் அதையும தர மறுக்கின்றனர். 50 சதவீதம் வருவாய்த் துறை சார்ந்தே விவசாயிகள் இருந்த போதும் இது சம்பந்தமாக கொடுக்கப்படும் மனுக்களுக்கு பதிலும் இல்லை; நடவடிக்கையும் இல்லை.

<u>கருகும் பயிர்கள்</u>

ரவீந்திரன்:– சிதம்பரம்– காட்டுமன்னார்கோவில் தாலுகாக்களில் போதிய தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் மிகவும் சிரமப்படுகின்றனர். இங்கு 70 சதவீதம் நேர நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஒரு வாரமாக நாற்றங்காலுக்கு கூட தண்ணீர் இல்லை. பயிர்கள் கருகுகின்றன.

மேட்டூர் அணையில் இருந்து கல்லணைக்கு வரும் தண்ணீரில் 10 சதவீதம் தண்ணீர் நமக்கு தர வேண்டும். அதன்படி கல்லணையில் இருந்து 2 ஆயிரம் கன அடி தண்ணீர் தருவதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் 1,200, 1,100 கன அடி தண்ணீர் தான் நமக்கு கிடைத்துள்ளது. அதே நேரத்தில் தஞ்சை, நாகை மாவட்டங்களுக்கு வழங்கப்படும் தண்ணீரின் அளவை குறைப்பதில்லை. எனவே கல்லணையில் இருந்து நமக்கு கிடைக்க வேண்டிய தண்ணீரை கேட்டுப்பெற வேண்டும்.

கலெக்டர்:– கல்லணையில் இருந்து நமக்கு கிடைத்துள்ள தண்ணீர் அளவு குறித்த விவரங்களை கொடுங்கள். அதை அரசுக்கு அனுப்பி வைத்து நமக்கு கிடைக்க வேண்டிய தண்ணீரை கேட்டுப்பெறலாம்.

<u>முதல்–அமைச்சருக்கு பாராட்டு</u>

ரவீந்திரன்:—நாகை, பெரம்பலூர் மாவட்டங்களில் மாவட்ட நிர்வாகமே நிதி ஒதுக்கீடு செய்து ஏரிகளை தூர் வாரி ஆழப்படுத்தி வருகிறது. அப்படி ஆழப்படுத்தும்போது ஏரியில் இருந்து எடுக்கப்படும் மண் ஒரு யூனிட் ரூ.140—க்கு விற்கப்படுகிறது. இதனால் ஏரியும் ஆழப்படுத்தப்படுகிறது, அதிக அளவு தண்ணீரையும் பிடித்து வைக்க முடிகிறது. அதுபோல வறட்சியான காலங்களில் நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளையும் தூர்வார வேண்டும்.

இந்த ஆண்டு ஊக்கத் தொகையுடன் கூடிய நெல் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கவும், விவசாயிகள் வருமானத்தை பெருக்கும் வகையில் நெல் கொள்முதல் நிலையங்கள் தேவைப்படும் இடங்களில் கலெக்டர் அனுமதி பெற்று தொடங்கலாம் என்று அறிவித்த தமிழக முதல்—அமைச்சர் ஜெயலிலாதாவுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>சாலையை அப்புறப்படுத்த வேண்டும்</u>

கணேசன்:— கூட்டுறவு துறையில் நெல்சாகுபடி செய்ய ஏக்கருக்கு ரூ.17 ஆயிரம் கடன் தர வேண்டும். ஆனால் ரூ.14 ஆயிரம், ரூ.15 ஆயிரம்தான் கடன்தருகின்றனர். பொனேரிக்கரையில் பாசிமுத்தன் ஓடையின் குறுக்கே பாலம் கட்டி 2 ஆண்டுகள் ஆகின்றன. ஆனாலும் அதன் அருகில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக சாலையை அப்புறப்படுத்தவில்லை. விவசாயம் பாதிக்கப்படுவதால் அந்த சாலையை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்.

கலெக்டர்:— சம்பந்தப்பட்ட நெடுசாலைத் துறை அதிகாரிகள் அதை உடனடி அப்புறப்படுத்த வேண்டும்.

பூவாலை தமிழ்வளவன்:— சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு பகுதியில் இருந்து தண்ணீர் வராதால் அதை சுற்றியுள்ள பகுதிகளில் நெற்பயிர்கள் கருகி வருகின்றன. எனவே கருகும் பயிர்களை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

<u>அடிப்படை வசதிகள் இல்லை</u>

சக்திவேல்:— சாத்துக்கூடல் கீழ்பாதியில் பண்ணை குட்டை அமைப்பதற்கு சுடுகாட்டை தேர்வு செய்கிறார்கள். கடலூர் மாவட்டத்தில் ரூ.450 கோடி மதிப்பீட்டில் மகாத்மாகாந்தி தேசிய உரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் நடைபெற்று வருவதாக கூறுகின்றனர். ஆனால் எங்குமே வேலைகள் நடந்ததாக தெரியவில்லை. இதில் நடைபெறும் முறைகேடுகளால் விவசாயிகளும் பாதிக்கப்படுகின்றனர்.

சாத்துக்கூடல் மணவாளநல்லூர், முகுந்தநல்லூர் வாய்க்கால்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி ஆழப்படுத்த வேண்டும்.

கோபாலகிருஷ்ணன்:– விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு நாள் ஒன்றுக்கு 1,000–க்கும் மேற்பட்ட விவசாயிகள் வந்துசென்ற போதும் அங்கு கழிப்பறை, ஓய்வறை உள்ளிட்ட எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லை. சாத்துகூடல் தெற்கு பகுதியில் குறைந்த மின் அழுத்தம் காரணமாக விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

2,750 நெல் மூட்டைகள் மாயம்

மாதவன்:– பண்ருட்டியில் வேளாண்மை உற்பத்தி கூட்டுறவு சங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கருங்குழி கிடங்கில் விவசாயிகளிடம் அடகு பிடித்த 2,750 நெல் மூட்டைகள் காணாமல் போய் உள்ளன. பாதுகாப்பு அதிகாரியை மீறி நெல் மூட்டைகள் மாயமானது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. இது குறித்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வீராணம் ஏரி தண்ணீரை சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் தாலுகாக்களில் உள்ள பாசன பகுதிக்கு போகத்தான் மீதமுள்ள தண்ணீரை சென்னை குடிநீருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றுதான் ஒப்பந்தம் உள்ளது. ஆனால் தற்போது சென்னை குடிநீருக்கு போகத்தான் சாகுபடிக்க தண்ணீர் நிலை மாறி இருப்பதால் பயிர் சாகுபடி செய்ய தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகள் மிகவும் சிரமப்படுகின்றனர். கல்லணையில் இருந்து நமக்கு கிடைக்க வேண்டி தண்ணீரை பெற்றுத்தர வேண்டும். சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு வழியாக பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும்.

திட்டக்குடி பஸ்நிலையத்தில் 27 கடைகளுக்கு கோர்ட்டு தடையை மீறி பட்டா கொடுப்பது பற்றி விசாரணை நடத்த வேண்டும். கூட்டுறவு சங்கங்களில் நிலம் அடமானம் வைத்து பெறப்படும் கடன் தொகையை ரூ.1 லட்சத்தில் இருந்து 2 லட்சமாக அதிகரிக்க வேண்டும்.

அறிக்கை தர வேண்டும்

கலெக்டர்:– நெல்மூட்டைகள் காணாமல் போனது குறித்து சம்பந்தப்பட்ட கூட்டுவுத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி அதன் அறிக்கையை எனக்கு தர வேண்டும். வீராணம் ஏரியில் இருந்து சென்னை குடிநீருக்கும், பாசனத்துக்கும் ஒரே மாதிரியாகத்தான் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. கல்லணையில் இருந்து நமக்கு கிடைக்க வேண்டிய தண்ணீரை அரசிடம் கேட்டுப்பெறுவோம்.

கோதண்டம்:– விவசாயிகளின் கரும்புக்கு பணம் வழங்குவது தொடர்பாக கடந்த 2006–ல் முத்தரப்பு கூட்டம் நடத்தப்பட்டது. அதில் கரும்பு வெட்டிய 14–வது நாளுக்குள் கரும்புக்கான கிரைய பணத்தை முழுவதுமாக கொடுக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. அதை சர்க்கரை ஆலைகள் பின்பற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு விவாதம் நடந்தது.

(பாக்ஸ்)முறைப்பாசனத்தை அமல்படுத்த கலெக்டர் உத்தரவு

குறைகேட்பு கூட்டத்தில் விவசாயி ரவீந்திரன் பேசும்போது பயிர் சாகுபடிக்கு தண்ணீர் வினியோகம் செய்யும்போதும் பாரபட்சம் காட்டப்படுவதால், சிறு, குறு விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். எனவே அனைத்து விவசாயிகளுக்கும் தண்ணீர் கிடைக்க முறைப் பாசனத்தை அமல்படுத்த வேண்டும் என்றார்.

இதற்குப் பதில் அளித்து பேசிய கலெக்ர் கிர்லோஷ்குமார் விவசாயிகளுடன் கலந்துபேசி முறைப்பாசனத்தை அமல்படுத்த வேண்டும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

**நெல்லிக்குப்பம், காராமணிக்குப்பத்தில் குளம் தூர் வாரும் பணி**



கடலூர் ஊராட்சி ஒன்றியம் காராமணிக்குப்பம் பஞ்சாயத்தில் மெயின் ரோட்டில் குளம் உள்ளது. இந்த குளத்தில் ஆகாயத் தாமரை செடிகள் மண்டி, குளம் சுகாதாரமற்ற நிலையில் உள்ளது. இந்நிலையில் காராமணிக்குப்பம் பஞ்சாயத்து தலைவர் நடராஜன் தலைமையில், துணைத்த தலைவர் கணேசன், ஊராட்சி செயலாளர் வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் குளத்தை தூர்வாரும் பணி நடைபெற்றது. இதில் 100 நாள்

வேலைவாய்ப்பு திட்டத்தில் பணிபுரிவோர் கலந்து கொண்டு தாமரை செடிகளை அகற்றி, குளத்தை தூர்வாரினர்.

## நீர் இருப்பு வரப்பெற்றவுடன் வீடூர் அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படும் கலெக்டர் சம்பத் அறிவிப்பு



விழுப்புரம்,

போதிய நீர் இருப்பு வரப்பெற்றவுடன் வீடூர் அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படும் என்று கலெக்டர் சம்பத் அறிவித்துள்ளார்.

<u>வீடூர் அணை</u>

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ளது வீடூர் கிராமம். இங்குள்ள வீடூர் அணை 8 கோடியே 59 லட்சத்து 16 ஆயிரம் சதுர அடி நிலப்பரப்பில் பரந்து விரிந்து காணப்படுகிறது. இந்த அணைக்கு செஞ்சி, மேல்மலையனூர் ஆகிய பகுதிகளில் இருந்து வரும் வராக நதியின் மூலமும் தொண்டூரில் இருந்து தொண்டி ஆற்றின் மூலமும் தண்ணீர் வருகிறது.

இந்த அணையின் மூலம் தமிழகத்தில் 2,200 ஏக்கர் நிலங்களும், புதுச்சேரி மாநிலத்தில் ஆயிரம் ஏக்கர் என மொத்தம் 3,200 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இந்த அணையில் இருந்து ஆண்டுதோறும் அக்டோபர் மாதத்தில் தண்ணீர் திறக்கப்பட்டு மொத்தம் 135 நாட்கள் விவசாய பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்படுவது வழக்கம்.

<u>விரைவில் தண்ணீர் திறப்பு</u>

ஆனால் தென்மேற்கு பருவமழை பொய்த்து விட்டதாலும் வடகிழக்கு பருவமழை தொடங்க தாமதம் ஏற்படுவதாலும் நீர்த் தேக்கத்தில் போதிய அளவில் நீர் இருப்பு

இல்லாத காரணத்தினாலும் வீடூர் அணையில் பிரதான கால்வாய் வழியாக வருகிற 1–ந் தேதி முதல் வழக்கப்படி பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட இயலாத நிலை உள்ளது.

இதுபற்றி கலெக்டர் சம்பத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், வீடூர் அணையின் நீர்தேக்கம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. அணையில் போதிய அளவில் நீர் இருப்பு வரப்பெற்றவுடன் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

## திருச்சி மாவட்டத்தில் இந்த மாதம் கூட்டுறவு விற்பனை இணையம் மூலம் 6,700 மெட்ரிக் டன் உரம் விற்பனை மேலாண்மை இயக்குனர் தகவல்



திருச்சி மாவட்டத்தில் கூட்டுறவு விற்பனை இணையம் மூலம் இந்த மாதம் 6ஆயிரத்து 700 மெட்ரிக் டன் உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்று மேலாண்மை இயக்குனர் நந்தகுமாரி கூறினார்.

<u>ஆலோசனை கூட்டம்</u>

திருச்சி மாவட்டத்தில் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்படும் உர வியாபார அபிவிருத்தி தொடர்பான ஆலோசனை கூட்டம் திருச்சியில் நடந்தது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணைய மேலாண்மை இயக்குனர் நந்தகுமாரி தலைமை தாங்கி பேசுகையில், கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலம் இந்த மாதம் மட்டும் 6ஆயிரத்து 700 டன் உர விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றார்.

<u>பரிசுகள்</u>

கூட்டத்தில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் நிர்வாக குழு உறுப்பினர் பாலன், திருச்சி மண்டல இணைப்பதிவாளர் ராஜேந்திரபிரசாத், திருச்சி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் மிருணாளினி, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணைய பொதுமேலாளர் சந்திரசேகரன், இப்கோ மாநில மேலாளர் மதியழகன், மண்டல மேலாளர் சுப்ரமணியன், கிரிப்கோ உர நிறுவன மண்டல மேலாளர் ஜெகநாதன், கள அலுவலர் மனோஜ், இப்கோ டோக்கியோ நிதி ஆலோசகர் கிருஷ்ணன், துணைப்பதிவாளர்கள் முசிறி ஆத்மநாபன், லால்குடி திலீப்குமார், திருச்சி விற்பனை இணைய துணைப்பதிவாளர் முத்தையன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் அதிக அளவு உர விற்பனை செய்த திருவளர்சோலை, மால்வாய், கவுண்டம்பட்டி, அலகரை, செங்காட்டுப்பட்டி ஆகிய தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

## திருச்சி மாவட்டத்தில் உள்ள ஏரிகளை தூர் வாரி,கால்வாய்களை சீரமைக்க வேண்டும் விவசாயிள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கோரிக்கை




திருச்சி மாவட்டத்தில் உள்ள ஏரிகளை தூர் வாரி, கால்வாய்களை சீரமைக்க வேண்டும் என்று விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கோரிக்கை விடப்பட்டது.

திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட கலெக்டர் (பொறுப்பு) தர்ப்பகராஜ் தலைமை தாங்கினார். இந்த கூட்டத்தை தொடங்கி வைத்து தர்ப்பகராஜ் பேசியதாவது:–

<u>விதை நெல் இருப்பு</u>

திருச்சி மாவட்டத்தில் சம்பா நெல் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்ய திட்டமிட்டு இதுவரை 20 ஆயிரத்து 554 ஏக்கரில் நடவு பணிகள் நிறைவடைந்து உள்ளது. நடவு பணிகள் அடுத்த மாதம் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு அம்மாத இறுதிக்குள் முடிக்கப்படும். சம்பா பருவத்திற்கு ஏற்ற மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, பி.பி.டி 5204, ஆடுதுறை 39, அம்பை 19 மற்றும் கோ 43 ஆகிய ரகங்களின் சான்று பெற்ற விதைகள் 548 மெட்ரிக் டன் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் கிலோவிற்கு ரூ.5 மானியத்தில் வினியோகம் செய்யப்பட்டு உள்ளது. மேலும் 124 மெட்ரிக் டன் சான்று பெற்ற நெல் விதைகள் வேளாண் விரிவாக்க மையங்களிலும் 105 மெட்ரிக் டன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களிலும் இருப்பில் உள்ளது.

நடப்பு சம்பா பருவத்திற்கு தேவையான உரங்கள் யூரியா 6ஆயிரத்து 846 மெட்ரிக் டன்னும், டி.ஏ.பி 6429 டன்னும், பொட்டாஷ் 3563 டன்னும் மற்றம் கூட்டுரம் 7710 டன்னும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் உரக்கடைகளில் போதிய அளவு இருப்பு உள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

இதனை தொடர்ந்து பல்வேறு விவசாய சங்க தலைவர்களும் பேசியதாவது:–

<u>தற்கொலை செய்வோம்</u>

அய்யாக்கண்ணு (பாரதிய கிசான் சங்கம்)–தமிழகத்தில் நிலவிய கடும் வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 1000 ரூபாய் நிவாரண உதவியும், அரிசியும் வழங்கவில்லை என்றால் பல விவசாயிகள் தற்கொலை செய்து இருப்பார்கள். தொடக்க கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்கு கடன் தர மறுக்கிறார்கள். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடனை செலுத்தாத விவசாயிகளின் படத்தை பத்திரிகையில் வெளியிட்டு கேவலப்படுத்துகிறார்கள். விவசாயிகளை திருடர்கள் போல் நடத்துகிறார்கள். இப்படி செய்யும் வங்கி அதிகாரிகள் மீது மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும். விளைபொருட்களுக்கு லாபகரமான விலையும், விவசாயிகள் வாங்கிய கடனையும் மத்திய அரசு தள்ளுபடி செய்யவில்லை என்றால் ஆயிரம் விவசாயிகள் டெல்லிக்கு புறப்பட்டு சென்று பிரதமர் வீட்டு முன் விஷம் குடித்து தற்கொலை செய்ய இருக்கிறோம்.

எங்களது இந்த வேண்டுகோளை மாவட்ட கலெக்டர் டெல்லிக்கு தெரியப்படுத்த வேண்டும்.

ஏரிகளை தூர்வாரவேண்டும்

விசுவநாதன்( தமிழக ஏரிப்பாசன விவசாயிகள் சங்கம்)– திருச்சி மாவட்டத்தில் சம்பா சாகுபடி தொடங்கி உள்ள நிலையில் கூட்டுறவு வங்கிகள் கடனை திரும்ப செலுத்தாத விவசாயிகளுக்கு கடன் தர மறுக்கிறார்கள். கடன் வழங்குவதற்கு மாவட்ட நிர்வாகம் உத்தரவிடவேண்டும். மணப்பாறை பகுதியை சேர்ந்த சத்திரப்பட்டி ஏரி, மரவனூர் ஏரி, கத்திகாரன் பட்டி ஏரி, சமுத்திரம் ஏரி ஆகிய ஏரிகளை தூர்வாரி வரத்து கால்வாய்களை சீரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஜி.கே முரளிதரன் (காங்கிரஸ் விவசாய பிரிவு)– கே.சாத்தனூர் கிராமத்தில் புதிய கட்டளை வாய்க்கால் 14ம் எண் ஷட்டர் பாசன கிளை வாய்க்காலின் நீர்ப்போக்கி உடைந்து கிடக்கிறது. இதனால் அங்கு பாசனம் செய்ய வேண்டிய 150 ஏக்கர் நேரடி பாசனம் நடக்காமல் வேதனையில் விவசாயிகள் தவிக்கிறார்கள். மாவட்ட கலெக்டர் இதில் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

சாலை விரிவாக்கம் என்ன ஆனது?

வீரசேகரன் (அய்யன் வாய்க்கால் பாசன தாரர் சங்கம்)– திருச்சி– சிதம்பரம் சாலை மேம்பாட்டிற்காக லால்குடி நகர பகுதியில் 3 ஆண்டுகள் எந்தவொரு கட்டுமான பணி மற்றும் விரிவாக்க பணிகளையும் மேற்கொள்ள கூடாது என்று கட்டி உரிமையாளர்களிடம் 5 வருடங்களுக்கு முன் எழுதி வாங்கினார்கள். ஆனால் சாலை விரிவாக்க பணிகள் இதுவரை தொடங்க வில்லை. இதனால் வர்த்தக நிறுவனங்கள், வியாபாரிகள் தங்களது கட்டிடங்களை விரிவாக்கம் செய்ய முடியாமல் தவிக்கிறார்கள். இதுபற்றி மாவட்ட நிர்வாகம் விளக்கம் அளிக்கவேண்டும்.முன்னதாக தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி அய்யாக்கண்ணு தலைமையில் சில விவசாயிகள் கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்தனர். காங்கிரஸ் விவசாய சங்க மாநில துணை தலைவர் புலியூர் நாகராஜன், விவசாய சங்க தலைவர்கள் ராஜா சிதம்பரம், மாசிலாமணி உள்பட பலர் பேசினார்கள்.

## துவரை சாகுபடி செய்தால் கூடுதல் மகசூல் கிடைக்கும் வேளாண்மை இணை இயக்குனர் தகவல்

விவசாயிகள் நடவு முறையில் துவரை சாகு படி செய்தால் கூடுதல் மகசூல் கிடைக்கும் என்று வேளாண்மை இணை இயக்குனர் தெரி வித்தார்.

<u>விவசாயிகளுக்கு பயிற்சி</u>

புதுக்கோட்டை மாவட்டத் தில் துவரை பயிர் சாகுபடி பரப்பை அதிகப் படுத்தவும் துவரை உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி கூடுதல் மகசூல் பெற்று பயறு உற்பத்தியினைப் பெருக்கிடும் நோக்கத்தோடு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், பயறு இயக்கத்தின் கீழ் நடவு முறையில் துவரை சாகுபடி எனும் புதிய தொழில்நுட்பம் மூலம் 110 எக்டேர் பரப்பளவில் செயல் விளக்கங்கள் அமைக்கப்பட உள்ளது. நடவு முறையில் துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு எக் டேருக்கு ரூ.7 ஆயிரத்து 500 மானிய மதிப்பில் தேவை யான இடுபொருட்கள் வழங் கப்படுகின்றன.

நடவு முறையில் துவரை சாகுபடி செயல்விளக்கங்கள் அமைக்கும் விவசாயிகளுக்கு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் முதல் கட்டமாக நடவு முறையில் துவரை சாகுபடி செயல் விளக்கம் அமைக்கும் அனைத்து வட்டாரத்தை சேர்ந்த 30 விவசாயிகளுக்கு குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத்தின் மூலம் வம்பன் வேளாண் அறிவியல் மையத்தில் பயிற்சி அளிக்கப் பட்டது.

<u>கூடுதல் மகசூல்</u>

இந்த பயிற்சியை புதுக் கோட்டை மாவட்ட வேளா ண்மை இணை இயக்குனர் ஷாஜகான் தொடங்கி வைத்து, விவசாயி களுக்கு தொழில் நுட்பம் குறித்த வழிகாட்டியை வழங்கி பேசினார். அவர் பேசுகையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் பெரும்பாலும் துவரைப் பயிர் ஊடுபயிராக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. துவரை மகசூல் சராசரியாக ஏக்கருக்கு 250 முதல் 350 கிலோ மட்டுமே பெறப்படுகிறது.

துவரையில் கூடுதல் மகசூல் பெற்று உற்பத்தியை அதிகப்படுத்தும் நோக்கில் நடவு முறையில் துவரை சாகுபடி எனும் தொழில்நுட்பம் விவசாயிகளிடையே பிரபல மாகி வருகிறது. இதன் மூலம் ஏக்கருக்கு 1000 கிலோ வரை மகசூல் கிடைக்க வாய்ப் புள்ளது என்பதால், துவரைப் பயிரை நடவு முறையில் தனிப் பயிராக சாகுபடி செய்து கூடுதல் மகசூல் பெற வேண் டும், என்றார்.

<u>ஊக்கத்தொகை</u>

புதுக்கோட்டை மாவட்ட மாநில அரசுத் திட்ட வேளா ண்மை துணை இயக்குனர் பாலன், உழவர் பயிற்சி வேளாண்மை அலுவலர் எஸ்.ராஜசேகரன் ஆகியோர் பேசினர். வம்பன் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் மற்றும் பேராசிரியர் அசோகன் மற்றும் உதவி பேராசிரியர் கதிரவன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். வேளாண் இணை இயக்குனர் அலுவலக மத்திய திட்ட வேளாண்மை அலுவலர் ஜெகதீஸ்வரி பேசினார். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு பயிற்சி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. முடிவில் குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் ராஜசேகரன் நன்றி கூறினார்.

## பெரம்பலூரில் மாவட்ட வருவாய் அதிகாரி தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

பெரம்பலூரில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் சுப்பிரணியன் தலைமை யில் நடைபெற்றது.

<u>**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**</u>

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வரு வாய் அலுவலர் சுப்பிரணியன் தலைமையில் மாவட்ட கலெக்டர் கூட்ட அரங்கில் நடை பெற்றது.

பயிர் காப்பீடு செய்த பயிர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்றும், கடந்த வருடத்திற்குரிய பயிர் காப்பீட்டு தொகை சம்பந்தப் பட்ட நிறுவனத்தால் விரை வில் வழங்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பயிர் கடன் முகாமில் வழங்கப் பட்டிருந்த விண்ணப்பங்க ளுக்கு விரைவில் பயிர் கடன் வழங்க வேண்டும் என்றும். தமிழ்நாடு மின்¢சார வாரியத் தால் வழங்கப்படும் இலக்கை விட கூடுதலாக மின் இணைப்பு வழங்க வேண்டும் என்றும், ஏரிகளுக்கு நீர் வருவதற்கான வரத்து வாய்க் கால்களைசீர் செய்திடவும் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென்றும், விவசாயி கள் கோரிக்கை வைத்தனர்.

அதன் பின்னர் மாவட்ட வருவாய் அலுவலர் பேசியதாவது:-

<u>**மழையளவு**</u>

பெரம்பலூர் மாவட்டத்தில் ஆகஸ்ட் 2013வரை 312.06மிமீ மழை பெய்துள்ளது. இது சராசரி மழையளவை விட அதிகமாகும். மாவட்டத்தில் தற்போது நெல் 140 எக்டரிலும், பயறுவகை 46 எக்டரிலும், கரும்பு 4404 எக்டரிலும், மக்காச்சோளம் 6009 எக்டரி லும், பருத்தி 10933 எக்டரிலும் மற்றும் எண்ணெய்வித்து பயிர்கள் 221 எக்டரிலும் பயிர் செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மைத்துறையில் நெல், நிலக்கடலை மற்றும் பயறு வகை பயிர்கள் உள் ளிட்ட விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப் பில் வைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் கோரிக்கை கள் முறையாக பரிசீலிக்கப் பட்டு முறையான நடவடிக்கை கள் விரைந்து மேற்கொள்ளப் படும். பயிர் கடன் கேட்டு விண்ணப் பித்துள்ள தகுதி யுள்ள விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்கவும், வரத்து கால் வாய்களை சீர்செய்வதற்கு தேவையான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துணை இயக் குனர் ஆல்பிரட், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவி யாளர்(வேளாண்மை) கனக சபை, தோட்டக்கலை துணை இயக்குனர் (பொறுப்பு) இந்திரா, விவசாய சங்க பிரதிநிதிகள் ராஜாசிதம்பரம், ராஜேந்திரன், முருகேசன், வரதராஜன், செல்லத்துரை, இராமலிங்கம் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கோவிலூர் பகுதியில் குளங்களில் வீசப்பட்ட தென்னைமரங்கள்



வேடசந்தூர் அருகே உள்ள கோவிலூர் பகுதியில் வெட்டப்பட்ட தென்னைமரங்கள் குளங்களில் போடப்பட்டுள்ளதால் நிலத்தடி நீர் மட்டம் பாதிக்¢கும் நிலை ஏற்பட்டுள்ளது.

## <u>குளங்களில் வீசப்பட்ட தென்னை மரங்கள்</u>

திண்டுகக்கல் மாவட்டம் வேடசந்தூர் அருகே உள்ள கருசகக்காபட்டியில் சிலர் விவசாய நிலத்தை வாங்கி அதை சமப்படுத்தி வீட்டுமனைகளாக பிரித்து விற்பனை செய்வதற்கான வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதற்காக அந்த நிலத்தில் இருந்த தென்னை மரங்கள் ஜே.சி.பி. இயந்திரம் மூலம் வேரோடு பிடுங்கப்பட்டது. தென்னை மரங்களை டிராகக்டரில் ஏற்றி கோவிலூர் கிராமத்தைச் சுற்றியுள்ள அய்யம்பாடிகுளம், துலுகக்கர்குளம், நம்பிநாயகக்கர்குளம் மற்றும் வறட்டாறு ஆகிய இடங்களில் போட்டுவிட்டு சென்றுள்ளனர்.

சுமார் 100-கக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் மேற்கண்ட இடங்களில் கிடக்கின்றன. மழை பெய்யும் போது குளத்தில் மழைநீர் தேக்கப்படுவதற்கு, இந்த தென்னை மரங்கள் தடையாக இருக்கும். மேலும் தண்ணீரும் மாசு அடையும். நிலத்தடி நீரும் பாதிக்கப்படும். ஆற்றில் மழை நீர் ஓட்டத்தையும் தடை செய்யும். எனவே மேற்கண்ட இடங் களில் வீசப்பட்ட தென்னை மரங்களை அகற்ற வருவாய் துறையினர் நடவடிகக்கை எடுகக்க வேண்டும் என்று கோவிலூர் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பி.டி.ஆர். வாய்க்காலில் தண்ணீர் திறக்கக்கோரி தேனி கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் முற்றுகை

பி.டி.ஆர். வாய்க்கால் மற்றும் தந்தை பெரியார் வாய்க்காலில் தண்ணீர் திறக்க வேண்டும் என்று வலியுறுத்தி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தை விவசாயிகள் நேற்று முற்றுகையிட்டனர்.

### <u>விவசாயிகள் முற்றுகை</u>

தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களின் பாசனம் மற்றும் குடிநீர் ஆதாரமாக முல்லைப் பெரி யாறு அணை திகழ்கிறது. தேனி மாவட்டத்தை கடந்து செல்லும் இந்த முல்லைப் பெரியாற்று தண்ணீரை அருகில் உள்ள மாவட்டங் களில் பாசனத்திற்கு இன்றள வும் பயன்படுத்தி வருகின் றனர்.

ஆனால் தேனி மாவட்டத் தில் இந்த ஆற்று நீரை பாசன நீர் ஆதாரமாக கொண்ட பி.டி.ஆர். வாய்க் கால், தந்தை பெரியார் வாய்க்கால் பாசன விவ சாயிகள் முல்லைப்பெரி யாற்று தண்ணீரை பயன் படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

இந்த வாய்க்கால்களின் மூலம் பாசன வசதி பெறும் நிலங்களில் இந்த ஆண்டு ஒரு போக நெல் சாகுபடியை கூட தொடங்க முடியாமல் விவ சாயிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இவ்வாறு பாதிக் கப்பட்ட விவசாயிகள் சுமார் 100 பேர் தேனி மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு நேற்று வந்தனர். பி.டி.ஆர். வாய்க்கால் மற்றும் தந்தை பெரியார் வாய்க்காலில் தண்ணீர் திறக்க வலியுறுத்தி கலெக்டர் அலுவலகத்தை விவசாயிகள் முற்றுகை யிட்டனர்.

**<u>கலெக்டரிடம் மனு</u>**

இதுகுறித்து தகவல் அறிந்ததும் போலீஸ் இன்ஸ் பெக்டர் சுகுமாறன், சப்- இன்ஸ் பெக்டர் ரவீந்திரன் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விவசாயிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். இதை அடுத்து விவசாயிகள் மாவட்ட கலெக்டர் கே.எஸ்.பழனிசாமியை சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்.

அந்த மனுவில் கூறப்பட்டு உள்ளதாவது:-

பி.டி.ஆர். வாய்க்கால், தந்தை பெரியார் கால்வாய் மூலம் விவசாயிகள் ஒரு போகம் விவசாயம் கூட செய்ய முடியாமல் உள்ளனர். இந்த தண்ணீரை நம்பி விவ சாயம் செய்து பாதி யிலேயே தண்ணீர் நிறுத்தப் படுவதால் விவசாய பயிர்கள் கருகி விடு கின்றன. இந்த அவல நிலை தொடர்கதையாக இருப்பதால் விவசாயிகள் விவசாயம் செய்து பயன் அடைய முடியாமல் நஷ்டம் அடைந்து கடனாளியாகி வருகிறோம்.

**<u>தண்ணீர் திறக்க வலியுறுத்தல்</u>**

ஆண்டு தோறும் செப்டம் பர் மாதம் 15-ந்தேதி இந்த வாய்க்கால்களில் பாசனத் திற்கு தண்ணீர் திறக்க வேண் டும். இந்த ஆண்டு தற்போது வரை இந்த கால்வாய்களில் தண்ணீர் திறக்கப்படவில்லை. முல்லைப்பெரியாற்றில் இருந்து தண்ணீர் கொண்டு வர வாய்க்கால் இருந்தும், வளமான நிலங்களும், உழைக்க தயாரான விவசாயிகள் இருந் தும் தண்ணீர் திறக்காத தால் இந்த அவலங்கள் தொடர் கிறது. எனவே ஒருபோக சாகு படிக்கு 120 நாட்கள் தண்ணீர் திறப்பதை உறுதி செய்து பி.டி.ஆர். வாய்க்கால், தந்தை பெரியார் வாய்க்காலில் தண் ணீர் திறந்துவிட வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டு இருந்தது.

மனுவை பெற்றுக் கொண்ட கலெக்டர் கே.எஸ்.பழனிசாமி, இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். இதைஅடுத்து விவசாயிகள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

## கண்மாய்களுக்கு தண்ணீர் வரும் வரத்து கால்வாய்களை சீரமைக்க வேண்டும்

## விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தல்



கண்மாய்களுக்கு தண்ணீர் வரும் வரத்துக் கால்வாய்களை சீரமைக்க வேண்டும் என்று விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டத்தில் வலியுறுத் தப்பட்டது.

### குறைதீர் கூட்டம்

சிவகங்கை மாவட்ட விவ சாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் ராஜாராமன் தலைமை யில் நடைபெற்றது. கூட்டத்தில் வேளாண்மை துணை இயக்குனர் தட்சிணா மூர்த்தி, மாவட்ட வருவாய் அதிகாரி தனபால், கூட்டுறவு இணை பதிவாளர் காந்திந £தன், விவசாயிகள் சார்பில் சேங்கைமாறன், கந்தசாமி, ஆதிமூலம், ஆபிரகாம், கன்னி யப் பன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

கரும்பு விவசாயிகள் ரகு நாதன்:- சிவகங்கை சக்தி சர்க் கரை ஆலையில் விவசாயி களுக்கு தரவேண்டிய 4 கோடி மற்றும் வங்கிக்கு செலுத்த வேண்டிய 39 கோடி சேர்த்து மொத்தம் 43 கோடி ரூபாய் இதுவரை கொடுக்கவில்லை. இதை நம்பி வாழ்க்கை நடத் தும் விவசாயிகளால் நகை கடனோ, பயிர்கடனோ பெற முடியவில்லை. பணத்தை உரிய முறையில் கொடுக்க முடியாவிட்டால் இந்த ஆலையை மூட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கலெக்டர்:- வருகிற 30-ந் தேதிக் குள் பணத்தை தருவ தாக ஆலை நிர்வாகம் தெரி வித் துள்ளது. அப்படியில்லை யென்றால் இது குறித்து அரசுக்கு தெரிவிக்கலாம்.

### வரத்துகால்வாயை சீரமைக்க கோரிக்கை

விவசாயி சேது:- மானா மதுரையை அடுத்த முத்தனேந் தலில் உள்ள கண்மாய்க்கு வைகையாற்றில் இருந்து தண் ணீர் வந்தது. 25 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது கண்மாயை சீரமைத்துள்ளனர். ஆனால் வரத் துகால்வாய்களை சீரமைக் காததால் வைகை யாற்று தண்ணீர் கண்மாய்க்கு வருவதில்லை. எனவே வரத்து கால்வாயை சீரமைக்க நட வடிக்கை எடுக்க வேண்டும்.

இதே போல் விவசாயிகள் தரப்பில் சேங்கைமாறன் பேசும்போது, வைகை அணையில்இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட வேண் டும். மேலும் வேளாண்மை விரிவாக்க அ லுவலகங்களில் கோ-43 ரக நெல் விதைகள் கிலோ ரூ.22க்குவிற்கப்படுகிறது. ஆனால் கூட்டுறவு சங்கங்களில் ரூ.33க்கு விற்பனையாகிறது. எனவே இதை சீரான விலைக்கு ரூ.22க்கு விற்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

**<u>இன்சூரன்ஸ் தொகை</u>**

இதற்கு பதில் அளித்து அதி காரிகள் தரப்பில் பேசும்போது, அரசிடம் இருந்து ரூ.30கோடி இன்சூரன்ஸ்தொகை கேட்கப் பட்டுள்ளது. இந்த தொகை கிடைத்தவுடன் வழங்க நட வடிக்கை எடுக்கப் படும் என்ற னர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு மாவட்ட செயற்குழு உறுப்பினர் கந்தசாமி பேசும்போது, சிவகங்கை மாவட்டத்தில் 716 பொதுப்பணித்துறை கண் மாய் களும், 4 ஆயிரத்துக்கு அதிகமான ஒன்றிய கண் மாய்களும், இதுதவிர நக ராட்சி மற்றும் பேரூராட்சி களின் ஏராளமான குளங்கள், ஊரணிகள் உள்ளன. இந்தஆண்டு இந்த பகுதியில் 437 மில்லிமீட்டர் மழை மாவட் டம் முழுவதும் பதி வாகி யுள்ளது.

இந்த அளவுக்கு மழை பெய்தும், கண்மாய்களுக்கு தண்ணீர் கிடைக்காத நிலை உள்ளது. இதற்கு காரணம். வரத்துகால்வாய் ஓடைகளில் புதற்கள் வளர்ந்துள்ளன. சில இடங்களில் தனிநபர் ஆக்கிர மிப்பும் உள்ளது. எனவே மாவட்ட நிர்வாகம் வரத்து கால் வாய்ஓடைகளை சீர் செய்து மழை நீரை சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண் டும்.

**<u>20 அடி ஆழம்</u>**

மேலும் காரைக்குடி தாலுகா பெரியக்கோட்டையில் அகல ரெயில்பாதை பணிக் காக மண்எடுக்க அனுமதி பெற்ற கண்மாயில் 20 அடி ஆழத்திற்கு மண்எடுத்துள்ள னர். இதனால் கண்மாய் மடையைவிட ஆழமாக தரை மட் டம் உள்ளதால் மடை வழியாக தண்ணீர் வெளியேற முடியாத நிலை உள்ளது. எனவே இந்த கண்மாயின் பள்ளங்களை

சீர்செய்து அள வுக்கு அதிகமாக மண் எடுத்த அனுமதித்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

இவ்வாறு விவாதம் நடை பெற்றது.